Registered as a Newspaper பக்கங்கள்: 12 விலை ரூபா 6·00

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.

நாதம் 5 | திருவள்ளுவர் ஆண்டு 2025 | ஆனி 03 | 17-06-94 | வெள்ளிக்கிழமை | ஓசை 119

## அரச ஊழியருக்கு இலவச வைத்திய காப்புறுதி

அரசாங்க சேவையிலுள்ள நிரந்தர ஊழியர்களுக்கு இலவச வைத்திய காப்புறுதித் திட்டமொன்றைக் கொண்டுவர பொது நிர்வாக அமைச்சு முடிவுசெய்துள்ளது. இதற்குத் தேவையான பணத்தை அரசாங்கமே வழங்கும். இதன் மூலம் அரசாங்க சேவையிலுள்ள நான்கு லட்சம் நிரந்தர ஊழியர்கள் பயன்பெறுவர் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்காக அரசாங்கம் வருடமொன்றிற்கு (11-ம் பக்கம் பார்க்க)

# சமாதானத்திற்கு நாம் தயாராகவுள்ளோம்; சூழ்நிலை இருப்பதாகத் தெரியவில்லை

## பி. பி. ஸிக்கு தமிழ்ச்செல்வன் பேட்டி

(லண்டன்)

தற்போது சமாதானப் பேச்சு வார்த்தைகள் ஏற்படுவதற்கான சூழ்நிலை இருப்பதாக எமக்குத் தெரியவில்லை. போர் நிறுத்தத்திற்கும் சமாதானத்திறகும் நாம் தயாராக இருக்கிறோம் என பல தடவைகள் பகிரங்கமாகவே அறிவித்திருக்கின்றோம். ஆனால் சிறிலங்கா அரசாங்கம் சமாதானத்திற்கான எமது கோரிக்கைகளை நிராகரித்து வருகிறது என அண்மையில் யாழ். வந்திருந்த பி.பி.ஸி செய்தியாளர் ஜோர்ச் ஆர்னிக்கு விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் வழங்கிய பேட்டியில் தெரிவித்தார்,

இப்பேட்டி நேற்று பி.பி.ஸி வானொலியில் ஒலிபரப்பாகியது அதன் விபரம் வருமாறு;

கேள்வி; அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே பேச்சு வார்த்தைகள் நடைபெறக்கூடிய சாத்தியக்கூறு உண்டா? (11ஆம் பக்கம் பார்க்க)

## மதவாச்சி - கெப்பிட்டிகொல்லாவை

# பொலிஸ் நிலையம் புலிகளால் தாக்கி முற்றாக அழிக்கப்பட்டது

## 4 பொலிஸ் பலி; 8 பேரை காணவில்லை

(கொழும்பு)

மதவாச்சிப் பொலிஸ் பகுதியில் அமைந்துள்ள கெப்பிட்டிகொல்லாவை பொலிஸ் நிலையம் நேற்று அதிகாலை விடுதலைப் புலிகளால் தாக்கி அழிக்கப்பட்டது. இத்தாக்குதலின் போது நான்கு பொலிசார் கொல்லப்பட்டதாகவும், காவல் நிலையப் பொறுப்பதிகாரி உட்பட நான்கு பேர் படுகாயமடைந்ததாகவும் எட்டுப்பேரைக் காணவில்லை எனவும் ஏ. எப். பி. செய்திகள் தெரிவிக்கின்றன. இப்பொலிஸ் நிலையத்தில் இருந்த ஆயுதங்களும் விடுதலைப் புலிகளால் எடுத்துச்செல்லப்பட்டதாகவும் மேலும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிங்களக் குடியேற்றங்களை முழுமையாகக் கொண்ட இப்பகுதியின் பாதுகாப்பிற்கென அமைக்கப்பட்ட பொலிஸ் நிலையமே இத் தாக்குதலுக்கு உள்ளானதாகும். நேற்று அதிகாலை 1. 00 மணியளவில் நடைபெற்ற இத்தாக்குதல் ஒரு அதிரடித் தாக்குதலாக மிகக் குறுகிய நேரத்தில் இடம்பெற்றதாகவும், தாக்குதலின் போது புலிகள் மோட்டார் தாக்குதல் நடத்தியதாகவும் ஏ. எப். பி. செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன.

மேலும் இத்தாக்குதலின் போது பத்துலட்சத்திற்கும் அதிகமான பெறுமதியுடைய ஆயுதங்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டதாக (11 ஆம் பக்கம் பார்க்க)

நிபந்தனையற்ற பேச்சு

## புலிகளின் அறிவிப்பு ராணுவத்துக்கு சந்தேகம்

(கொழும்பு)

போர்நிறுத்தம் ஒன்று இல்லாமல் சிறிலங்கா அரசுடன் பேச்சுக்களை நடத்த விடுதலைப் புலிகள் முன்வந்திருப்பது இராணுவ தரப்பினருக்கு சந்தேகத்தைத் தந்துள்ளதாக ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

எவ்வித முன் நிபந்தனையுமற்ற பேச்சுக்கு புலிகள் முன்வந்திருப்பதாலேயே அவர்களுக்கு இந்த சந்தேகம் எழுந்துள்ளதாக அச் செய்தி மேலும் குறிப்பிடுகிறது.

## உடனடி போர்நிறுத்தம்; அதிகாரிகள் வற்புறுத்து

### அரச அதிபர் தகவல்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்காப் படைகளின்சில உயர் அதிகாரிகளும், அரச உயர் அதிகாரிகளும் நாட்டில் உடனடியாக போர்நிறுத்தம் ஏற்படுத்தப்பட்டு சமாதானம் ஏற்படுத்தப்படவேண்டும் என்ற கருத்தை தம்மிடம் வலியுறுத்தியதாக யாழ். அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

தாம் கொழும்பில் தங்கியிருந்த காலத்தில் இவ்வதிகாரிகள் மேற்படி கருத்தைத் தெரிவித்ததாக அவர் மேலும் தெரிவித்தார்.

## சிறிலங்கா அமைச்சரவையில் இன்று சிறு மாற்றம்?

(கொழும்பு)

ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவினால் இன்று மேற்கொள்ளப்படும் அமைச்சரவை மாற்றத்தின் மூலம் மூன்று புதிய முகங்கள் மட்டுமே மந்திரிசபைக்கு வர இருப்பதாகவும் தெரிய வருகின்றது.

காமினி திசாநாயக்காவுக்கு மீண்டும் மகாவலி அமைச்சு வழங்கப்படும் எனவும் றொனி டி மெல்லுக்கு திட்ட அமுலாக்கல் அமைச்சும் வேறு ஒரு அமைச்சும் வழங்கப்பட இருப்பதாகவும் தெரிய வருகின்றது. ஆனால் காமினி ஜெயவிக்கிரம பெரேரா தொடர்பாக இறுதி முடிவு தெரியவரவில்லை.

மற்றும் வேறு சிறு சிறு (11 ஆம் பக்கம் பார்க்க)

## இன்றும் நாளையும் படகு சேவை

கிளாலி - பூநகரி விசேட படகு சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் எனவும், நாளை படகு சேவை வழமையான நேரத்திற்கு நடைபெறும் எனவும் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

# தேர்தல் குறித்து டி. பி. அரச அதிபருடன் பேச்சு

(கொழும்பு)

இவ்வருட இறுதியில் நடைபெற இருக்கும் தேர்தலை வடபகுதியிலும் நடாத்துவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து யாழ். அரசாங்க அதிபருடன் ஜனாதிபதி பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளார்.

யாழ். அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகரை ஜனாதிபதி திரு. டி, பி. விஜேதுங்கா அழைத்து மேற்படி விடயம் குறித்து நீண்ட நேரம்பேச்சுவார்த்தைநடாத்தினார். இப்பேச்சுவார்த்தைகளின் போது வடக்கில் தேர் (11 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

**மகாதேவா ஜோதிடம்**
குறிப்பு, கை, வீடு பார்த்தல், அதிர்ஷ்ட எண் மாற்றம் ஆகியவற்றிற்கு ஜோதிடரைத் தினசரி காலை முதல் மாலை வரை 140, செல்லர் வீதி, நல்லூரில் சந்திக்கலாம். [8543]

**வெள்ளிப் பாதசரம்**
இந்த நூற்றாண்டிற்கான ஈழத்துச் சிறுகதைத் தொகுப்பு. விற்பனையாகிறது: வசந்தம், தமிழ்த்தாய் புத்தக சாலைகளில். [8569]

**மில்க்வைற்**
மக்கள் அபிமானம் பெற்ற மில்க்வைற் நீலசோப், சலவைத்தூள், பார்சோப், எங்கும் கிடைக்கிறது. மொத்தத் தேவைக்கு தொடர்பு கொண்டால் உங்கள் கடை வாசலிலேயே கிடைக்கும். மில்க்வைற் மேலுறைகள், வெற்றுப்பக்கற்றுகளுக்கு வழமை போல் அன்பளிப்புகள். ''மில்க்வைற்'' (சி,9814)

**ஜோதிட விஞ்ஞானம்**
எண்ஜோதிடம், விவாகப் பொருத்தம், கைரேகை, ஜாதகங்கள், விஞ்ஞானரீதியாகக் கணிப்பதற்கும், பார்வையிடவும். தினமும் காலை 6 மணி முதல் காலை 9 மணி வரை சந்திக்கலாம். சத்யா (prof. சத்தியதாஸன்) இடிகுண்டருகே, கட்டுடை (8580)

## சிறகடிக்கிறது

சிட்டு
அறிவாற்றல் ஏடு

இதழ் - 2
விலை - 9.50

(சி-9808)

விற்பனையாகிறது!
இளங்கவிஞர்களுக்கான இரு திங்கள் ஏடு

**கவிதை**
(ஆனி - ஆடி இதழ்)

அதிக பக்கங்கள்
விலை : ரூபா 15/-
(8581)

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



### இளம்புலி கிதா
(செல்வி தர்ஷனி திருச்செல்வம்)

தாயின் மடியில் 17-10-1975
தாயக மண்ணில் 17-06-1991

திதி
14-07-1994

சுழிபுரம் -திருச்செல்வம் குடும்பத்தினர்
(8579)

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்: 16-06-1969

ஆண்டவன் அடியில் 16-06-1991

### வீரவேங்கை அசோகன்
(சதாசிவம் பரமகுரு)
(மட்டக்களப்பு)

உனது பிரிவால் துயருறும் அப்பா, அம்மா, சகோதரிகள், அண்ணா, மச்சான்மார், அன்பு மருமக்கள்மார், மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள்.

185/5 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
(8577)

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 06-02-1973

வீரச்சாவு 17-06-1991

### 2ஆம் லெப். திரணா
(செல்வி ஜெயராணி பாலசுப்பிரமணியம்)

இளமைப் பருவத்தில் இன்பங்களை நீ மறந்து
புலியாக மாறினாய் புகழுடம்பு எய்தினாய்
மண் மீட்கச் சென்ற மானமுள்ள திரணாவே
எண்ணம் ஈடேறும் ஈழம் மலருமம்மா.

அருணர் வளவு,
அல்வாய் வட மேற்கு,
அல்வாய்.
(8586)

பெற்றார், சகோதரர்,
அப்பப்பா, அப்பம்மா,
சபா (சித்தப்பா)
கிளி (சித்தப்பா)

## கண்ணீர் அஞ்சலிகள்

கல்விப் பெருங்கடலும், பண்பின் சிகரமும், எளிமையின் வடிவமுமாய் விளங்கிய யதார்த்தவாதி அமரர் பேராசான், அ. துரைராசா அவர்களுக்கு எமது இதயம் நெகிழ்ந்த கண்ணீர் அஞ்சலிகள்.

காணிப் பதிவக ஊழியர்கள்
பருத்தித்துறை
(8582)

## நினைவு கூருகின்றோம்...
## 17-06-1994

1987-ம் ஆண்டு இதேதினத்தில் மன்னார்-அடம்பன் பகுதியில் சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட உலங்குவானூர்தித் தாக்குதலில் கொல்லப்பட்ட 03 தமிழ் விவசாயிகள்.

1989-ம் ஆண்டு கிளிநொச்சி தெணியன்குளம் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட உலங்குவானூர்தித் தாக்குதலில் கொல்லப்பட்ட தமிழர்கள்

சாவகச்சேரி-சங்கத்தானைப் பகுதியில் இந்தியப் படையினரால் கைது செய்யப்பட்டு சுட்டுக்கொல்லப்பட்ட பளை - தம்பலகாமத்தைச் சேர்ந்த தமிழிளைஞன்.

ரயில்வண்டியில் பயணம் செய்து கொண்டிருக்கையில் வவுனியாவில் வைத்து தேசவிரோதசக்திகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட யாழ்-கந்தர்மடத்தைச் சேர்ந்த யாழ்-பரியோவான் கல்லூரி மாணவன்.

1990-ம் ஆண்டு திருமலை-மூதூர், கட்டைபறிச்சான் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின்போது வீரச்சாவெய்திய,

**கப்டன் குட்டி** (இராசலிங்கம் சிவானந்தம் - மேன்காமம்-திருமலை)

மாங்குளத்தில் சிறிலங்கா முகாம் மீதான சமரின் போது வீரச்சாவெய்திய,

**மாக்கிரட்** (கறுப்பையா கிருஷ்ணகுமார்-முள்ளியவளை, கணுக்கேணிமேற்கு-மணலாறு)

மட்டுநகரில் சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட உலங்குவானூர்தித்தாக்குதலின்போதுவீரச்சாவெய்திய,

**நியாஸ்** (- - - மட்டக்களப்பு)

அம்பாறையில் சிறிலங்கா இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட மட்டு-பெரியநீலாவணை 01 ஐச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

தந்தாமலையில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட குழந்தை உட்பட 03 தமிழர்கள்.

மட்டு-கிரான் பகுதியில் சிறிலங்காப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழர்கள்.

திருமலை-மூதூர்ப் பகுதியில் சிறிலங்காப்படையினரால் படுகொலை செய்யப்பட்ட தமிழ்ப் பொதுமகன், மற்றும் அலஸ் தோட்டப்பகுதியில் படுகொலை செய்யப்பட்ட தமிழர்கள்,

மல்வத்தையில் சிறிலங்கா இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட சிற்றூரவை தலைவர் எமது ஆதரவாளரான,

**கனகரத்தினம்** (மல்வத்தை-அம்பாறை)

1991-ம் ஆண்டு வவுனியா-செட்டிப்புலவுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின் போது வீரச்சாவெய்திய,

**வேந்தினி** (நேசமலர் கணபதிப்பிள்ளை - பன்குடாவெளி-மட்டு)
**லெப்.சுதா** (ஜெகநாதன் நாகேந்திரன் - கோயில்குளம்-வவுனியா)
**2-ம் லெப்.ராமன்** (பழனி கிருஷ்ணமூர்த்தி-அரசன்குளம்,ஓமந்தை-வவுனியா)
**2-ம் லெப்.குணாளன்** (சுந்தரம் ரவிச்சந்திரன்-மடுக்குளம்-வவுனியா)
**கபில்ராஜ்** (இராமசாமி ஜோன் ஜேக்கப் ஜஸ்ரின்-4-ம் படிவம், பாவற்குளம்-வவுனியா)

வவுனியா-குருக்களூர்ப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச்சமரின்போது வீரச்சாவெய்திய,

**ஜெகன்** (-காந்திராஜா-திருப்பழுகாமம்-மட்டு)
**பிறேமினி** (மேரிலிற்றின் சார்மெலா அந்தோனிப்பிள்ளை-பெரியதம்பனை-வவுனியா)
**திரணா** (ஜெயராணி (ஜெயா) பாலசுப்பிரமணியம்-அல்வாய்மேற்கு, கரவெட்டி-யாழ்)
**கிதா** (தர்சினி திருச்செல்வம்-அம்பனை, தெல்லிப்பழை-யாழ்)

மட்டு-38-ம் கிராமத்திற்கு வந்த பாலையடி முகாம் இராணுவத்தினரால் சுட்டுக்கொலைசெய்யப்பட்ட அப்பகுதியைச் சேர்ந்த முதியவர்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்
**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி-9811)

நல்லூர் கிளைநூலகம்.

# பாப்பரசர் 2ஆம் அருளப்பர் சின்னப்பரின் இலங்கை விஜயம்

உலகெங்கும் வாழும் அனைத்துக் கத்தோலிக்க மக்களின் ஆன்மீகத்தலைவரான பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் 1995-ம்ஆண்டு ஜனவரி20-ம் நாள் இலங்கைக்கு விஜயம் செய்வார் என எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கான ஏற்பாடுகள் பல்வேறு சமய சமூக அரசியல் அரச மட்டங்களிலும் இடம் பெற்றுக் கொண்டிருக்கின்றன. இவரைத் தரிசிக்கவும், காணவும், ஆசீர்வரங்களைப் பெறவுமென இலங்கையின் பல இடங்களிலிருந்தும் மக்கள் கொழும்பு வந்து கூடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

பாப்பரசரின் இவ் விஜயத்தின் போது கோவா தேசத்தைப் பிறப்பிடமாகக் கொண்டு 16 ம் நூற்றாண்டுகளில் இலங்கையில் பணிபுரிந்த 'யோசப்வாஸ்' அடிகளாரை புனிதராக்கும் முயற்சியில் 'வணக்கத்துக்குரிய' என்ற உயர் நிலையில் சேர்க்கும் வைபவமே முக்கியம் பெறுவதாகக் கூறப்படுகிறது. இதுவே பாப்பரசரின் இலங்கை விஜயத்திற்கான முக்கிய காரணமாகவும் அமைகிறது இத்துடன் கோவா பிரதேச மக்களுடைய வருகையும் இங்கு எதிர்பார்க்கப்பட வேண்டிய தொன்றாகிறது. அடுத்த நாளே முடிவுறும் இவ் விஜயம் எந்தளவு மற்றைய நாடுகளுக்கான பயணங்களோடான பாப்பரசரின் விஜயத்தை ஒத்திருக்கின்றது என்பது இடம் பெறும் நிகழ்வுகளிலிருந்துதான் நோக்க வேண்டிய தொன்றாகிறது.

பாப்பரசர் பயணம் செய்வது என்பது எந்த வகையிலும் புதியதன்று, முதல் பாப்பரசராகக் கருதப்படும் சீமோன் இராயப்பர் கூட யெருசலேமிலிருந்து அந்தியோக்கியாவுக்கும் பின் அந்தியோக்கியாவிலிருந்து உரோமை நகருக்கும் பயணம் செய்தார் என கிறீஸ்தவ வரலாறு கூறுகிறது. எனவே பாப்பரசர் நாடுகளுக்குப் பயணம் செய்வதென்பது வரலாற்றில் எந்தவகையிலும் புதியதல்லாவிடினும் தற்போதைய பாப்பரசர் 2-ம் அருளப்பர் சின்னப்பர் மேற்கொண்டு வரும் அதிகப்படியான பயணங்கள் கத்தோலிக்க திருச்சபையின் வரலாற்றில் ஒரு புதிய உத்வேகத்தைக் கொண்டுள்ளனவாக அமைகின்றன. இவர் தனது நாடுகளுக்கான விஜயங்கள் பற்றி கூறுகையில்,



''பார்வைக்கெட்டாத அளவு பரந்து விரிந்து நிற்கும் இவ்வுலகின் இறுதி எல்லை வரை சென்றுவர விரும்புகின்றேன். கிறிஸ்தவர்களின் விசுவாசத்தை உறுதிப்படுத்தவும் நந்நெறி மதிப்பீடுகளை அனைவர்க்கும் உணர்த்திடவும், மக்களின் அடிப்படை உரிமைகளை அளிக்கும்படி அரசியல் தலைவர்களைக் கெஞ்சிடவும் அணுயுக ஆயுதப் போட்டியைத் தடுத்து நிறுத்திடவும் என் பயணங்களைப் பயன் படுத்திக் கொள்கின்றேன்'' என்றார்.

பயணங்கள் பல செய்துள்ள திருத்தந்தை தனது பயணங்களை தனியே மத விடயத்துக்காக மட்டுமன்றி முழு மனித, சமூக, அரசியல் உரிமைகள், பொருளாதாரம், ஒழுக்கம் போன்ற முக்கியத்துவத்துக்காகவும் பயன்படுத்துவதை மேற் கூறியதிலிருந்து மட்டுமன்றி அவரின் பயண நிகழ்வுகளிலும், ஆற்றிய உரைகளிலும், சந்திப்புகளிலும் இருந்து அறியக்கூடியதாகவுள்ளது.

### வித்தியாசமான பாப்பரசர்

கத்தோலிக்க திருச்சபையின் 264 வது பாப்பரசராக 1978-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 16ம் திகதி தெரிவு செய்யப்பட்ட இவர் போலந்து நாட்டைச் சேர்ந்தவர். இதற்கு முன் கடந்த 455 ஆண்டுகளாக இத்தாலிய நாட்டினரே பாப்பரசர்களாக இருந்து வந்துள்ளனர். எனவே பல வகைகளிலும் பல முறைகளிலும் இவர் வித்தியாசமானவராகவும், முக்கியமானவராகவும், முதன்மையானவராகவும் விளங்குகின்றார். ஐரோப்பிய நாடுகளின் கிழக்கத்திய பகுதிகளிலிருந்து உருவான முதலாவது திருத்தந்தையாவதுடன், கம்யூனிஸ்ட் ஆதிக்க நாட்டிலிருந்து வந்த முதலாவது திருத்தந்தையுமாவார். கடந்த ஒரு நூற்றாண்டு காலத்தில் நாம் சந்திக்கும் முதல் இளம் திருத்தந்தையுமாகக் காணப்படுகிறார்.

சாதாரண குடும்பத்தில் 1920-ல் பிறந்து 38 வது வயதில் ஆயராகி 47 வது வயதில் கர்தினால் ஆக உயர்ந்து 1978-ம் ஆண்டு பாப்பரசரானார். நிறைவான ஆளுமையும் (Rich Persanality ஆழ்ந்த பக்தியும் அசைக்க முடியாத பற்றுறுதியும் கொண்ட ஒரு உண்மை மனிதாபிமானியாகவும் இறை மனிதனாகவும் உலகம் இன்று இவரைக் காண்கின்றது. Time வாரப் பத்திரிகை ஒரு முறை இவரை ''This poPe Knows How To Pope'' என வர்ணித்திருந்தது. மக்களுடன் இவர் கொண்டிருக்கும் இறுக்கமான தொடர்பை நாட்திருப்பலிகளை திருக்கூட்டங்களுடன் நிகழ்த்துவதும் மக்களைச் சந்திப்பதும், உரையாற்றுவதும் குணமாக்குவதும், பயணம் செய்து தரிசிப்பதுமான இவரின் செயல்கள் எமக்குத் தெளிவாகக் காட்டுகின்றன. ஆன்மீகத்தில் மிக முற்போக்கான சிந்தனையைக் கொண்டுள்ள போதும் திருச்சபையின் பாரம்பரியங்களிலும் ஒழுக்க முறைகளிலும் மிகக்கடினப் போக்கையும் கடைப்பிடித்துவரும் இவர் அண்மைக்காலங்களில் பலரதும் பலவிதமான மென்மையான விமர்சனங்களுக்கும் உள்ளாகி வருவதை நாம் அறியலாம்.

### இலங்கை விஜயம்

பாப்பரசரின் இலங்கை விஜயம் ஒரு வழிப்பயண ஒரு நாள் தரிப்பு விஜயமாக அமைகிறது. இதன் பிரதான நோக்கமாக அமைவது இலங்கையில் பணிபுரிந்த யோசப்வாஸ் அடிகளாரை வணக்கத்துக்குரிய என்ற உயர் நிலை ஏற்கும் சடங்காகும் அவுஸ்ரேலியா பிலிப்பைன்ஸ் நாடுகளின் பயணங்களை முடித்துக்கொண்டு வத்திக்கான் திரும்பும் பயணத்தில் இலங்கையையும் தரிசித்துச் செல்வார் எனச்சொல்லப்படுகிறது இந்நிலையில் இலங்கையிலும்இனப்பிரச்சினைபல கோணங்களிலும் ஒரு பூகம்ப நிலையில் காணப்படுகிறது. மனித உரிமை மீறல்களும் அரசியல் குளறுபடிகளும் அகதிவாழ்வும் அநாமதேயக் கொலைகளும் நிறைந்து காணப்படுகின்றன.

**நிவேதனன்**

இவரது விஜயம் குறித்து யாழ் மறை மாவட்ட குருக்களும், மக்களும் சேர்ந்து இந்த வருகையைப் பல்வேறு காரணங்கள் நிமித்தம் மீள் பரிசீலனை செய்யவும், தமது வருகையை எம் மக்கள் காண வருவதற்கான சீரான போக்குவரத்து, பாதுகாப்பு வசதிகள் குறித்தும் வேண்டுகோள் விடுத்துள்ளன.

இலங்கை கத்தோலிக்க திருச்சபை ஆயரவையில் ஒருவர் கர்தினால் என்ற உயர் நிலைக்கு உயர்த்தப்படக் கூடிய ஒரு சந்தர்ப்பத்தையும் இந் நிகழ்வு கொண்டுள்ளதாக உணரப்படுகின்றது. இதே வேளையில் அஸ்கிரிய, மல்வத்த பீடங்களைச் சேர்ந்த பௌத்த மத தலைமைப் பீடங்களின், ஏற்கனவே பிலான மதம் மாற்றும் குற்றச்சாட்டுகளுக்கு ஆளாகி வருகின்ற சிங்கள இலங்கை ஆயர்களின் நிலைமைகள் மேலும் விமர்சனத்துக் குள்ளாகக் கூடிய ஒரு சந்தர்ப்பமாகவும் இது அமைந்து விடலாம். இலங்கை அரசை பொறுத்தவரையில் இலங்கை மக்களில் ஒரு குறிப்பிட்ட வீதத்தினைக் கொண்டிருக்கும் கத்தோலிக்க மக்களின் அரசியல் அபிமானத்தையும் செல்வாக்கையும் பெற்றுக்கொள்ள பயன்படுத்தக் கூடிய ஒரு சந்தர்ப்பமாகவும் இது அமைந்து விடுகிறது.

எந்த மக்களுக்கு பணி செய்து தனது வாழ்வைத்தியாகம் செய் தாரோ அந்த மக்கள் அவரது (யோசப்வாஸ் அடிகளின்) 'வணக்கத்துக்குரிய' நிலைப்படுத்தல் வழிபாட்டில், வைபவத்தில் கலந்து கொள்ள முடியா நிலையும், அரசியல் அமைதியின்றி அல்லலுறுகிற நிலையும் இவ்விஜயத்தின் உண்மை அர்த்தத்தையும் அதன் ஆழ நோக்கங்களையும் மேலும் சிந்திக்க வைக்கிறது. யோசப்வாஸ் முனிவர் பணி புரிந்த யாழ்ப்பாண, வன்னி மாவட்ட மக்கள் இந்த வைபவத்துக்கு எவ்வகையிலும் பங்கு பற்ற முடியா நிலையில் இவ் வைபவ ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுவது இம்மக்கள் மீது இதற்குப் பொறுப்பானவர்கள் (இலங்கை ஆயரவை) கொண்டுள்ள ஞானக்கிசனையைக் காட்டுவதாக உள்ளது.

இத்தகைய பின்னணியிலும் இலங்கை விஜயத்தை மேற்கொள்ளலாம். பாப்பரசர் எவ்வகையில் அவரது விஜயம் ஒரு அமைதியின் விஜயமாக, உரிமைக்குரலின் விஜயமாக நீதியின் விஜயமாக விடுதலையின் விஜயமாக, விடிவின் விஜயமாக, ஒரு மேய்ப்பனின் விஜயமாக அமைகிறது என்பதை அவர் பரிமாறும் கருத்துரைகளிலும் கலந்து கொள்ளும் சந்திப்புக்களிலும் ஆற்றும் உரைகளிலும், கொண்டிருக்கும் ஆன்மீக அருளிலும் தங்கியுள்ளது என்பதைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

---

# வியாழன்- ராட்சத வால் நட்சத்திர மோதல்; விளைவை அவதானிக்க உலகம் தயார்!

எதிர்வரும் ஜூலை 16-ம் திகதி முதல் 22-ம் திகதிவரையான காலப் பகுதியை வானியல் விஞ்ஞானிகள் ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்துள்ளனர். பல்வேறு நாடுகளின் வானியல் ஆராய்ச்சியாளர்கள் ''ஷூமேக்கர் - லெவி'' எனும் வால் நட்சத்திரம் வியாழனுடன் மோதிச் சிதறவுள்ள அரிய காட்சியைக் காண இப்போதிருந்தே இராட்சத தொலை நோக்கிகள் முன் உட்கார்ந்து விட்டனர். வியாழன் கிரகத்திலிருந்து 240 மில்லியன் கிலோ மீற்றர் தூரத்தில் பயணம் செய்து கொண்டிருக்கும் கலிலியோ விண்கலமும் இந்த மோதலைப் படம்பிடித்தனுப்ப தயார் நிலையில் உள்ளது.

வியாழன் கிரகமானது பூமியைப் போல் 11 மடங்கு பெரியது. இதன் விட்டம் ஒரு லட்சத்து 42 ஆயிரம் கிலோமீற்றர் ஆகும். இக்கிரகம் சூரியனைச் சுற்றிவர 11.9 வருடங்கள் எடுக்கின்றன. இக் கிரகத்தின் உள்ளே சூரியனைவிட நான்கு மடங்கு அதிக வெப்பம் (சுமார் 25 ஆயிரம் சென்ரி கிரேட்) நிலவுகிறது. இது 90 சதவீதம் ஐதரசன் வாயுவாலும் மிகுதி மீதேன், அமோனியா, வாயுக்களுடன் நீர்த்துளிகளாலும் சூழப்பட்டுள்ளது. இக் கிரகத்துக்கு அண்மையாக ஹீலியம் வாயு மிக அடர்த்தியாக காணப்படுகிறது. 26,750 கிலோ மீற்றர் குறுக்களவு கொண்ட சிவப்பு புள்ளியொன்று இக் கிரகத்தில் காணப்படுகிறது மேலும் இதற்கு நான்கு உபகோள்கள் உள்ளன.

வியாழன் கிரகம் சூரிய குடும்பத்தின் பாதுகாவலன் எனக் கூறப்படுகிறது. வியாழன் மிகப் பிரமாண்டமானதாகவும், திணிவு கூடியதாகவும் இருப்பதால் அதன் பக்கத்தில் எது போனாலும் அதன் ஈர்ப்பு விசையினால் கவர்ந்து இழுக்கப்பட்டுவிடும். அநேகமான வால் நட்சத்திரங்கள் வியாழனின் இச் செயற்பாட்டினால் பாதிப்புக்கு உள்ளாகின்றன. சில வால் நட்சத்திரங்களின் சுற்றும் வேகம், பாதிக்கப்படுகின்றது சிலவற்றை அது நீண்ட தொலைவுக்குத் தள்ளி விடுகிறது. சிலவற்றை உள்ளிழுத்தும் விடுகிறது. இதனால் வால் நட்சத்திரங்களால் பூமிக்கு ஏற்படக் கூடிய ஆபத்துக்களை இக் கிரகம் இல்லாது ஒழித்து விடுகிறது. இதனால் ஒரு சிறந்த பாதுகாப்புக் கவசமாக விளங்குகிறது.

வால் நட்சத்திரங்கள் தீயினாலோ மின்சாரத்தினாலோ ஆனவையல்ல. பனிக்கட்டிகளாலும் தூசிகளாலும் இவை ஆக்கப்பட்டுள்ளன. இவற்றில் காணப்படும் பனிக்கட்டிகள் 300 அடி தூரத்திலிருந்து பல மைல் வரை நீளமாயிருக்கும். இப் பனிக்கட்டிகள் சூரியனிலிருந்து மிக அதிக தூரத்தில் இருக்கும் போது பிரகாசிப்பதில்லை. சூரியனை நெருங்கும் போது இப் பனிக்கட்டிகள் நீராவியாகவோ வாயுவாகவோ மாறும்போது ஒளிரத் தொடங்குகின்றன. இந் நிலையிலே இது ஒரு கோள வடிவமாக மாறி விடுகிறது. இதன் நடுவில் நியூகிளியசும் இதனைச் சூழ நீராவியும் தூசும் சூழ்ந்திருக்கும். மேலும் இப் பனிக்கட்டியானது நீராவியாகும் போது அமோனிய போன்ற வாயுக்களையும்வெளிவிடுகிறது. இவற்றின்தொகுதியேவால்நட்சத்திரத்தின் தலைப்பகுதி ஆகும். இதுவே ஒளி வீசும் பகுதியாக காணப்படுகிறது. இதுஏறாத்தாள 6000 மைலிலிருந்து 6 கோடி மைல்கள் வரை நீண்டிருக்கும்.

**தொகுப்பு சி. சிவபாலன்**

வாயுக்களும் தூசும் நிறைந்த பகுதியை சூரிய ஒளிக்கதிர் வீச்சு தாக்கும்போது தூசுப் பகுதி ஒரு நீண்ட வால் பகுதியாக நீளும்இதன் நீளம்சுமார் 63 கோடி மைல்கள் வரை இருக்கும்.

இந்த வால் நட்சத்திரங்கள் பெரும் மேகக் கூட்டம் போல அண்டவெளியில் காணப்படும். இவை சூரியனின் கவர்ச்சிக்குள் வரும்போது சூரியனை வட்டப் பாதையில் வலம்வரத்தொடங்குகின்றன. இவற்றின் சுழற்சிக் காலம் 10 வருடங் களிலிருந்து 20 இலட்சம் வருடங்கள் வரை வேறுபடலாம்.

இவ்வாறான வால்நட்சத்திரம் ஒன்று கடந்த ஆண்டு மார்ச் மாதம் 23-ம் திகதி மூன்று அமெரிக்க வானியல் ஆராய்ச்சியாளர்களின் தொலை நோக்கி யூடாக தென்பட்டது. ஜூனி ஷூமேக்கர், அவரது மனைவி கரோலின் இவர்களது நண்பர் டேவிட் லெவி ஆகியோரின்

(10ஆம் பக்கம் பார்க்க)

# இந்திய அரசியலைக் கலக்கும் தேர்தல் ஆணையாளர் சேஷன்

**இளையவன்**

இந்தியாவின் அரசியலரங்கில் சர்ச்சைக்குரிய பிரமுகராக மாறியிருப்பவர்களில் டி. என். சேஷன் இப்போது முதலிடம் வகிக்கின்றார். கல்லூரி மாணவர் மன்றங்கள் அவரது உரையை செவிமடுப்பதற்காக அவருக்கு ஆவலுடன் வரவேற்பு கொடுக்கின்றன. இளைஞர்கள், மாணவர்கள் உட்பட பல்வேறு தரத்தினரும் அவரிடம் ஆட்டோகிராப்' கையெழுத்துப் பெறுவதற்காக அலைகிறார்கள். 'சேஷன்' மன்றங்கள் அமைத்து சேஷன் புகழ்பாடும் சக்திகள் மூலை முடுக்குகளில் முளை விடுகின்றன. தொலைக்காட்சித் திரையில் ரி. என். சேஷன் தோன்றும் சந்தர்ப்பங்களில் எல்லாம் இரும்பைக் கவரும் காந்தம் போல மக்களைக் கவர்ந்து திரைகளைக் கூர்ந்து நோக்க வைக்கின்றார். இத்தனைக்கும் டி. என். சேஷன் ஒரு திரைப்பட நடிகரல்ல. பிரபல்யம் வாய்ந்த ஓர் அரசியல்வாதியுமல்ல எழுத்தாளனோ அல்லது இலக்கியவாதியோ அல்லது பத்திரிகை ஆசிரியரோ அல்ல அவர். இந்திய அரசின் அதிகாரிகளில் அவரும் ஒருவர். அதுவும் மக்களுடன் அதிகம் நேரடித் தொடர்பைக் கொண்டிராத மத்திய அரசின் தலைமை நிர்வாக அதிகாரிகளில் ஒருவர். ஆம். இந்தியத் தேர்தல் ஆணையகத்தின் தலைமை ஆணையாளர் தான் டி. என். சேஷன். ஆனால் அவர் மேற்கொண்ட அதிரடி நடவடிக்கைகளால் அரசியல்வாதிகளின் விருப்புக்கு அல்லது வெறுப்புக்கு ஆளாகி இருப்பதுடன், மக்கள் மத்தியில் பிரபல்யம் மிக்கவராகவும்மாறி மத்திய, மாநில அரசுகளுக்கும் ஊழல் அரசியல்வாதிகளுக்கும் சிம்மசொப்பனமாகியுள்ளார்.

## சேஷன் மேற்கொண்ட அதிரடிகள்

வேட்பாளர்கள் தேர்தலின் பொருட்டு செலவிடும் தொகைக்கு எல்லை நிர்ணயம் செய்தமை, பலமுறை வாக்குப் பதிவு நடத்தப்படும் வாக்குச் சாவடிகளுக்கு வீடியோ கமெராக்களுடன் ஒளிப்பதிவாளர்கள் அனுப்பப்பட்டமை, தேர்தல் முடிவுற்றதும் தேர்தல் சுவரொட்டிகள் மற்றும் தேர்தல் சுலோகங்களை அகற்றி சுத்தம் செய்ய உத்தரவிட்டமை என்பன போன்றவை உட்பட பலவிதமான அதிரடி உத்தரவுகளைப் பிறப்பித்தவர். தலைமை தேர்தல் ஆணையாளரான டி. என். சேஷன் இதற்கு முன்பு இந்தியாவில் தலைமை தேர்தல் ஆணையாளர் பொறுப்பில் இருந்த எந்த அதிகாரியும் இத்தகைய உத்தரவுகளைப் பிறப்பித்து இருக்கவில்லை என்பது இங்கு சுட்டிக்காட்டத்தக்கது. இன்னும் இந்தியாவிலுள்ள அனைத்து வாக்காளர்களுக்கும் இந்த ஆண்டு முடிவுக்கு முன்பாக வாக்காளர் அடையாள அட்டை வழங்கப்பட்டாலேயே அடுத்த ஆண்டில் தேர்தல் நடத்தமுடியும் என்று தன்னிச்சையாக அறிவித்தார். இந்தியாவிலுள்ள 500 மில்லியன் வாக்காளர்களுக்கும் புகைப்படங்களுடன் கூடிய அடையாள அட்டை வழங்குவது உடனடியாகச் சாத்தியமில்லை என்றும், பெரும் தொகைப் பணம் இதற்கு தேவைப்படும் என்றும் மத்திய மாநில அ/சுகள், முணுமுணுப்பு தெரிவித்த போதும் கூட சேஷன் அதைப் பற்றிக் கண்டு கொண்டதாக இல்லை.

அனைத்துலக அளவில் மதிக்கப்படுபவரும், இந்திய நவீன பொருளாதாரத்தின் சிற்பி என்று வர்ணிக்கப்படுபவருமான நிதியமைச்சர் டாக்டர் மன்மோகன்சிங்கை மிரட்டும் அளவுக்கு டி. என். சேஷன் துணிவு மிக்கவர். தவறு யார் செய்தாலும் தவறு தான் என்பதை துணிவுடன் அம்பலமாக்கும் டி. என். சேஷன், டாக்டர் மன்மோகன் சிங் தான் ஒருபோதும் வசித்திராத அசாம் மாநிலத்தை தனது சொந்த மாநிலமாக குறிப்பிட்டு அங்கிருந்து மாநிலங்களவைக்கு அவர் தெரிவு செய்யப்பட்டிருப்பதை செல்லாதது என்று அறிவித்து விட்டார். இதனால் அவரைப் பதவியிலிருந்து இறக்கி அவரது வாக்குரிமையைப் பறிக்க வேண்டும் என்பது டி. என். சேஷனின் தீர்ப்பு. மன்மோகன் சிங் தவறான தகவலைக் கொடுத்தது சட்டப்படி குற்றமேயானாலும் இந்தியாவில் தேர்தல்கள் நடைபெறத் தொடங்கிய காலம் முதல் இத்தகைய கெடுபிடிகள் காட்டப்பட்டிருக்கவில்லை என்பதையும் புரிந்து கொள்ளத் தான் வேண்டியிருக்கிறது.

அண்மையில் உத்தரப் பிரதேச மாநில இடைத் தேர்தலில் அரசுக்கு சொந்தமான உலங்கு வானூர்திகளை முதல்வர் முலாயம் சிங் யாதவ் பிரசாரத்திற்கு செல்வதற்காகப் பயன்படுத்தினார் என்ற குற்றச்சாட்டை அடுத்து அவ் இடைத்தேர்தல்களையே ஒத்தி வைத்தார். உத்தரப் பிரதேச அரசு நீதிமன்றத்திற்கு போய், பாவிக்கப்பட்ட உலங்கு வானூர்திகள் அரசுக்கு சொந்தமானவை அல்ல என்று நிரூபித்த பின்னர் தான் இடைத்தேர்தலுக்கான வாக்குப்பதிவுக்கு திகதி குறிக்கப்பட்டது. இது விடயத்தில் நீதிமன்றத்தின் தீர்ப்பு டி. என் சேஷனுக்கு மூக்கறுப்பு என்று கூறப்படுவது வேறு விடயம்.

இது போன்ற பல்வேறு நடவடிக்கைகளால் தலைமைத் தேர்தல் ஆணையாளர் டி. என். சேஷன் அரச தரப்பு அரசியல்வாதிகளை மட்டுமன்றி எதிர்க்கட்சியினரதும், நீதித்துறையினதும், ஏன் பொதுசன தொடர்புத்துறையினதும் வெறுப்பை சம்பாதித்துக் கொண்டுள்ளார். கைகளில் பீங்கான் கிண்ணங்களுடன் நடமாடும்காளை என்று பத்திரிகைகள் அவரைக் கிண்டல் அடிக்கின்றன.

## மத்திய அரசின் எதிர் நடவடிக்கை

இவ்வாறான சூழ்நிலையில் தான், தலைமைத் தேர்தல் ஆணையாளரின் தன்னிச்சையான அதிகாரங்களைக் கட்டுப்படுத்தஇந்திய மத்திய அரசு முற்பட்டது. இதற்காக இந்திய அரசியல் சாசனத்தை திருத்துவதற்கான முயற்சியும் மேற்கொள்ளப்பட்டது. தேர்தல் ஆணையகத்திற்கு ஒன்றுக்கு மேற்பட்ட ஆணையாளர்களை ஒத்த அதிகாரமுடையவர்களாக நியமிக்க மத்திய அரசு முடிவு செய்தது. டி. என் சேஷனுடன் மேலும் இருவர் தேர்தல் ஆணையாளர்களாக நியமனம் பெற்றனர். ஆனால் அவர்களது நியமனத்தை நீதிமன்ற நடவடிக்கை மூலமாக டி. என் சேஷன் முடமாக்கி விட்டார்.

தேர்தல் ஆணையாளரின் அதிகாரங்களை கட்டுப்படுத்துவது தொடர்பாக சுமார் இரண்டு வாரங்களுக்கும் மேலான பகீரத முயற்சியின் பின்னர் பாராளுமன்றத்தின் விசேட கூட்டத் தொடரில் அரசியலமைப்பிற்கான சட்டத் திருத்தங்களை கொண்டு வந்து நிறைவேற்ற மத்திய அரசு செயற்பட்டது. ஆனால் அரசியலில்மதஉணர்வுகளைப் பயன்படுத்துவது தொடர்பாகவும் உத்தேச சட்டத் திருத்தத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக இந்த மசோதாக்களை ஆதரிக்க பாரதீய ஜனதா பின்நின்றது. அத்துடன் பாராளுமன்றத்தில் இடம்பெற்றுள்ள சிறிய கட்சிகளும் கூட இந்த மசோதாக்களை ஆதரிக்க தயக்கம் காட்டின.

## சேஷனின் வரலாறு

கேரள மாநிலத்தின் பாலக்காடு பகுதியைச் சேர்ந்த டி என் சேஷன் அமைச்சரவைச் செயலாளராக பதவி ஏற்பதற்கு முன்பாக இந்தியாவின் சுற்றுச்சூழல் துறை செயலாளராகவும பாதுகாப்பு துறை செயலாளராகவும் பணியாற்றியவர். ராஜீவ் காந்தியோடும், காங்கிரஸ் கட்சியோடும் நெருக்கமான தொடர்புகளைக் கொண்டிருந்தவர். காங்கிரசின் விசுவாசி என்று பத்திரிகைகளாலும், எதிர்க்கட்சிகளாலும் பெரிதும் சாடப்பட்டவர்.

1991-ம் ஆண்டில் சந்திரசேகர் பிரதமராயிருந்த போது தேர்தல் ஆணையாளராக இவர் நியமனம் பெற்ற போது காங்கிரசின் விசுவாசி என்பதற்காகவேஇப்பதவிஅவருக்குவழங்கப்பட்டதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டியிருந்தன. இப்படிப்பட்ட ஒருவர் இப்போது ஆளுங் கட்சிக்கு பிரச்சினை தருபவராக இருக்கின்றார் என்பது ஒரு வகையில் வேடிக்கையானது தான்.

இந்தியாவில் தேர்தல்கள் நடாத்தப்படும் முறை குறித்து பல்வேறு தரப்பு மக்களிடமும் காணப்படும் அதிருப்திதான் சேஷனின் புகழுக்குக்காரணம் என்பது பி.பி.சியின் கணிப்பு. தேர்தல்களின் போது ஊழல், லஞ்சம், வாக்குகளை காசு கொடுத்து வாங்கும் போக்கு, அச்சுறுத்துவது போன்ற நடவடிக்கைகள் உலகெங்கும் நடைமுறையில் இருப்பது தான். இந்தியாவிலும் கூட பணபலம், உடல்பலம் என்பவை ஜனநாயகத்தைக்கேலிக் கூத்தாக்கி விடுகின்றன. வாக்குச் சாவடிகளை கைப்பற்றுதல், வாக்குப் பெட்டிகளைக் கைப்பற்றுதல், அருகிலிருக்கும் பிரதான பொலிசாருக்கு லஞ்சம் வழங்குதல், பெட்டிகளில் வாக்குகளைத் திணிப்பது என்பதுடன் வன்முறைகளும் கொலைகளும் பெருகிவருகின்றன. எனவேதான் சேஷன் கையாளும் வழிமுறைகள் தொடர்பாக சர்ச்சைகள் இருந்தாலும் ஊழலுக்கு எதிராகப் போராடுபவர் என்ற வகையில் அவரது புகழ் பரவுகின்றது. இந்தியாவின் தேர்தல் சீர்திருத்த மசோதா பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படுவதில் அரசாங்கம் அடைந்துள்ள தோல்வி டி. என். சேஷனுக்குஒரு ஊக்க மாத்திரை எனலாம்.

## என்னுயிர் பாரதம் எங்கே?

இந்த இடத்தில் அண்மையில் பாம்பே சாணக்கியாவின் கலாமந்திர் என்னும் நாடகக் குழுவினர் சென்னை காமராஜர் அரங்கில் மேடையேற்றிய ஒரு நாடகம் பற்றிக் குறிப்பிடுவது பொருந்தும்.

சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுவதில் நிபுணத்துவம் பெற்ற அமைச்சர், பொலிஸ் அதிகாரி, டாக்டர், வக்கீல் எனப்பலர் இடம்பெறும் இந்நாடகத்தில் அவர்களை நல்வழிப்படுத்தும் நேர்மை விரும்பியாக கதாநாயகன் விஜய்! நாடகக்கதை- நடிப்பு- பின்னணி இசை- இவை எல்லாவற்றையும் விட இந்த நாடகத்தைப் பார்த்த பிரதமவிருந்தினர்களில் ஒருவரான டி. என். சேஷனின் குறிப்பு தான் இங்கு முக்கியமானதாகும். 'என்னுயிர் பாரதம் எங்கே?' என்ற இந்தநாடகத்தில் நமது தேச நிலைமையை அழகாகச் சித்தரித்துள்ளார்கள். எனது நெஞ்சில் பேசுவதற்கு வார்த்தைகள் வரவில்லை. ஆனால் ஒரு விடயம் ஞாபகத்திற்கு வருகிறது. பாரதத்திற்கு சுதந்திரம் கிடைத்த போது பிரிட்டன் பிரதமராக இருந்த வின்ஸ்டன் சர்ச்சில் 'இன்னும் 50 ஆண்டுகளில்சுதந்திரம் என்ற பூமாலையை இந்தியர்கள் பிய்த்து விடுவார்கள்' என்று கூறினராம். இன்னும் மூன்று ஆண்டுகள் பாக்கி இருக்கிறது. இன்று நாட்டில் நாம் படுகிற அலங்கோலத்துக்கு மீட்பு எங்கே? அந்த மீட்புக்கு மருந்து யாரிடம்? எப்படிப்பட்ட மருந்து? மாத்திரையா? ஊசியா? கத்தி முனையா? தெரியவில்லையே என கூறி தமது குறிப்பை நிறைவு செய்து கொண்டார் சேஷன்.

---

## மோப்பம் பிடிக்கும் கணனி

விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் நாளுக்கு நாள் புதிய கண்டுபிடிப்புகளை உருவாக்கி வருகின்றன. கணனி யுகத்தில் இன்று விதவிதமான கண்டுபிடிப்புகள் அதிவேகமாக வளர்ச்சியடைந்து வருகின்றன. பேசும் கணனி, பார்க்கும் கணனி, படிக்கும் கணனி என்றெல்லாம் வந்து இன்று மோப்பம் பிடிக்கும் கணனியொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இங்கிலாந்தின் இரண்டு நிறுவனங்கள் சேர்ந்து இதனைக் கண்டுபிடித்துள்ளன. ஒருவர் உடலில் உள்ள நோயைக் கண்டுபிடித்து உறுதிப்படுத்த இந்தக் கணனி உதவுகிறது. மனிதன் மூச்சுவிடும் காற்றின் மணத்தை அளந்து, குறிப்பிட்ட நபருக்கு எத்தகைய நோய்கள் உள்ளன என இந்த நவீன கணனி கண்டுபிடித்து விடும் 21-ம் நூற்றாண்டில் வைத்தியசாலையில் இந்தக் கணனி ஆதிக்கம்பெறும். எதிர்காலத்தில் உளவு அறியவும் மற்றும் பல்வேறு நடவடிக்கைகளுக்கும் இது உதவக் கூடும்.

---


தெல்லிப்பழை, பண்டத்தரிப்பு
பனை, தென்னை வள
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின்
அங்கத்தவர்களுக்கான

**கலந்துரையாடல்**

மேற்படி இரு சங்கங்களின் வருடாந்தப் பொதுக் கூட்டம் கூட்டுதல் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் கீழ்க்காட்டப்பட்ட திகதிகளில் குறிப்பிட்ட இடங்களில் நடைபெறும் என்பதனை அறியத் தருகின்றோம். அனைத்து அங்கத்தவர்களும் இக்கூட்டத்தில் கலந்து கருத்துக்களை வழங்கிச் சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**இடம்பெயர்ந்து தென்மராட்சிப் பகுதியில் தொழில் புரியும், தொழில் புரியாத அங்கத்தவர்களுக்கான கலந்துரையாடல்**

18-06-1994 (நாளை) காலை 10.30 மணிக்கு சாவகச்சேரி றிபேக் கல்லூரியில் நடைபெறும்.

**வலிகாமம் பகுதியில் இடம்பெயர்ந்து தொழில் புரியும், தொழில் புரியாத அங்கத்தவர்களுக்கான கலந்துரையாடல்**

19-06-1994-ல் காலை 10.30 மணிக்கு மானிப்பாய் பிப்பிலி வலிகாமம் கொத்தணிக் காரியாலயத்தின் அருகில் உள்ள கட்டிடத்தில் நடைபெறும்.

தெல்லிப்பழை - பண்டத்தரிப்பு
பனை, தென்னை வள
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள்.

(சி-9699)

யாழ்ப்பாணம் நல்லூர்

# அமெரிக்காவின் மனச்சான்றிற்கு சவாலாகிவிட்ட அரிஸ்டீட்

பாலகுமாரன்

"வெண்ணெய் திரண்டு வரும் போது தாழிஉடைந்த" கதையாகி விட்டது கரிபியன் தீவான கெயிற்றி (Haiti) நாட்டு மக்களின் கதை. ஏனைய இலத்தின் அமெரிக்க நாட்டு வரலாறுகளை போலவே கொடுமைகள். சுரண்டல்கள் மலிந்த கொடுங்கோன்மை நிரம்பிய குவாரியர் குடும்ப ஆட்சி அங்கு 1986 ஆம் ஆண்டு முடிவிற்கு வந்த போது மக்கள் மகிழ்ந்தனர். ஆனால் மகிழ்ச்சி நீடிக்கவில்லை. தொடர்ந்து நான்கு ஆண்டுகள் பெரும் குழப்பங்கள் அங்கு நிலவியது. பின்னர் முதற்தடவையாக சனநாயகமுறையில் நடைபெற்ற தேர்தலில் தமது விருப்பத்திற்குரியசனாதிபதியாக 69விழுக்காடு வாக்குகளை அளித்து பரட்சிக்காரமதகுருவானஜீன் பெர்ட்ரான்ட் அரிஸ்டீட்டை (Jean Bertrand Aristide) தெரிவு செய்தனர். ஆனால் அவரது ஆட்சியும் நீடிக்கவில்லை. நீடிக்க கெயிற்றிய இராணுவத்தளபதி லெப். ஜெனரல் றாவுல் செட்ராஸ் (Raoul Cedras) விடவில்லை. 1991ஆம் ஆண்டு செப்டம்பர் அளவில் தானே கெயிற்றிய ஆட்சியை கைப்பற்றி அரிஸ்டீட்டை அமெரிக்காவிற்குதப்பியோடவைத்தார் பதவி நீக்கப்பட்ட நான்கு நாட்களுக்கு பின் அரிஸ்டீட் ஐ.நா சபையில்தோன்றியபோது அவருக்குகிடைத்தபெரும்வரவேற்புஅவர் மீண்டும் கெயிற்றிய மக்களின் சட்டரீதியான சனாதிபதியாக்கப்படுவார்என்கிற நம்பிக்கையைஏற்படுத்தியது. ஆனால் இன்றோ, என்றோ ஒருநாளாவதுஅரிஸ்உட்டால் நாடுதிரும்பமுடியுமாஎன்கிற கேள்வியே மிஞ்சிநிற்கின்றது இருந்தபோதும் கெயிற்றிய மக்கள் படும் அவலமும்1996ஆம்ஆண்டுஅரிஸ்டீட்டின்பதவிக்காலம் முடிய முன்னர் ஏதாவது செய்யப்படவேண்டும் என்கிற நிர்ப்பந்தமும் உலக அபிப்பிராயமும் அண்மைக்காலமாககெயிற்றி தொடர்பாக அதிக கவனம் செலுத்தப்படவேண்டிய நிலைக்கு மேற்குலகை தள்ளிவிட்டுள்ளன.

ஏனென்றால்முன்னர்24-12.1993ம்திகதியவெள்ளிமஞ்சரியில்நாம்குறிப்பிட்டதுபோல- மயிலே, மயிலே இறகுபோடு என்றுகெயிற்றியகொடுங்கோன்மை இராணுவத்திடம் கேட்டுப்பயனில்லை என்பது இப்போதுதெளிவாகிவிட்டது ஐ, நாவோ அல்லது "கெயிற்றியின் நான்கு நண்பர்கள்" எனக் குறிப்பிடப்படும் அமெரிக்கா, கனடா, பிரான்சு, வெனிசுலா போன்றவையோ மேற்கொண்ட பல முயற்சிகளோ - விதித்த பொருண்மிய தடைகளோ எதிர்பார்த்த பலனை தராததுமட்டுமல்ல, எதிர்பாராதபலவிளைவுகளையும் இன்று ஏற்படுத்தி விட்டது. கடந்த பல மாதங்களாக கெயிற்றிக்கு எதிராக ஐ.நா விதித்த எரிபொருள் தடைஏற்கனவே வறுமையின் கோரப்பிடியில் சிக்கியிருக்கும் கெயிற்றிய மக்களையே பெரிதும் பாதித்துவிட்டது எரிபொருள் தடை காரணமாக உணவுப் பொருள்களின்விலைகள் பன்மடங்காகி விட்டன.பலஏழைகட்கு இவை எட்டாத பொருட்களாகி விட்டன. தொற்று நோய் அதிகரிப்புகள்- ஊட்ட உணவு இன்றி இளம் பாலர் வாட்டம் என்பன அடிக்கு மேலடியாகிவிட்டன. ஏற்கனவே கெயிற்றியில் 67 லட்சம் மக்களில் 15 விழுக்காட்டினர் நிவாரண உதவிகளிலேயே தங்கியிருந்தவர்கள். இப்போது உதவ் வழங்கும் மனிதாபிமான அமைப்புக்கள் தமது உதவியின் பெரும்பகுதி எரிபொருள் செலவிலேயே கழிந்து விடுவதாக குறைப்படுகின்றனர். பல தொழிற்சாலைகள் மூடப்பட்டுவிட்டன.கெயிற்றியின் பிரதான தைத்த ஆடைகளை தயாரிக்கும் தொழிற்சாலைகள் மின்சாரம் இன்றி மூடப்படுவதால் 60 ஆயிரம் பேர் வேலை பார்த்த நிலைமாறி வெறுமனே எட்டாயிரம் பேரே இன்று தொழில் புரியும் அவல நிலை நிலவுகிறது. எனவே பொருண்மிய தடை என்பது உடனடியாக ஏழைகளையே பாதிப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

ஆனால் தடையால் பாதிக்கப்பட வேண்டிய இராணுவ அரசோ, அதன் கூட்டாளியான ஆளும் செல்வந்த வருக்கமோ, எவ்வித பாதிப்பையும் அடைந்ததாக தெரியவில்லை மாறாக அவர்கள் இன்னும் செல்வம் சேர்க்க வழியேற்பட்டுவிட்டது. இப்போது அருகிலிருக்கும் டொமினிக்கன் குடியரசிலிருந்து பெருமளவு எரிபொருள் கடத்தி வரப்படுகிறது.

கடலாலும், ஆற்றாலும், தரையாலும் இத்தொழில் அமோகமாக நடைபெறுகிறது. 35 விழுக்காடு முன்னைய தேவையை நிறைவேற்றும் அளவு எரிபொருள் வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த எரிபொருள் பன்மடங்கு விலையில் விற்கப்படுவதால் வசதியுள்ளோர் மட்டுமே இதனைப் பெறமுடியும். எனவே டொமினிக்கன் எல்லையை கண்காணிக்க முடியாத நிலையில் ஐ. நாவின் தடையால்என்ன பயன்? கடத்தல் தொழிலை அதிகரிக்க புதிய செல்வந்தரை தோற்றுவிக்க வழி செய்ததேமிச்சம்.கெயிற்றிய இராணுவத்திற்கு எவ்வித தாக்கமும் இல்லையென குமுறுகிறார் ஒரு மனித உரிமைக் காப்பாளர். இத்தகைய சிக்கல் காரணமாக அரிஸ்டீட் மீதும் கூட மக்கள் வெறுப்படையும் சூழல் தோன்றுவதாக தெரிவிக்கப்படுகிறது. ஏனென்றால்அரிஸ்டீட்டின் பதவிக் காலம் முடியும் வரை இப் பொருண்மியத்தடைகள் நிலவும் என்கிற கருத்து இராணுவ ஆட்சி சார்பானவர்களால் முன்வைக்கப்படுகின்றது. கெயற்றியர் மட்டுமல்ல ஐ. நா. பொருண்மிய, ஆயுததடைகள் விதித்த முன்னாள் யூகோஸ்லேவிய பகுதிகளிலும் இதே நிலைதான். இத்தடைகளால் நேரடியாக பொது மக்கள் பாதிக்கப்படுவதும் தடைகளை இரகசியமாக அவ்வந் நாடுகள் மீறுவதும் புதிய கடத்தல் முதலாளியமொன்று உருவாக வழி போடப்பட்டதேய தார்த்த நிலை என்கிறார் ஆய்வாளர் ஒருவர்.

எனவே இப்போது ஐ. நா. அமெரிக்கா போன்றவற்றின் எதிர்பார்ப்புக்குமாறாகசெட்ராசோ மிகக்கடுமையான போக்கினை கடைப்பிடிக்கிறார். அரிஸ்டீட் திரும்பவும் சனாதிபதியாக்கப்படும் முயற்சிகளை கேலி செய்வது போல் அவர் கடந்த மாதம் உச்ச நீதிமன்ற நீதிபதியொருவரை அரிஸ்டீட்டின் இடத்திற்கு புதிய சனாதிபதியாக நியமித்துவிட்டார். இச்செயலால் வெகுண்ட கிளின்டன், இராணுவ நடவடிக்கைகள் மேற் கொள்ள நேரிடும் என மறைமுகமாக இப்போது எச்சரித்துள்ளார். அது மட்டுமல்லாமல் அமெரிக்காவில் தங்கியிருக்கும் அரிஸ்டீட்டே காரசாரமான கண்டனங்களையும்கிளின்டனுக்குஎதிராக தெரிவித்து வருகிறார். அமெரிக்காவின் கெயிற்றி தொடர்பான கொள்கையை 'இனவெறிக் கொள்கை' 'மோசமான நகைச்சுவை' என அவர் அண்மையில் வருணித்தார்.

இவற்றின் பின்னணியில் அமெரிக்கப் படைக் கப்பல்களின் நகர்வும் டொமினிக்கன் குடியரசிற்கு மேலதிக அமெரிக்கப்படைகள் செல்லப்போவதாக அடிபடும் வதந்திகளும் இப்பகுதியில் இப்போதுபரபரப்பைதோற்றுவிக்கின்றன. அதே சமயம் ஐ.நாவோ மே மாதம் 21ஆம்திகதியை இறுதி எச்சரிக்கை தினமாக குறிப்பிட்டு அதன்பின் புதிய இறுக்கமான பொருண்மியத்தடைகள் விதிக்கப்போவதாக கூறியது. இப்போது கால எல்லை கடந்தநிலையில் புதிய பொருண்மிய தடைகளை ஐ. நா.விதிக்கப் போகின்றது அதுமட்டுமன்றி இதுவரை காலமும் அலைகடலில் கப்பலேறி அகதிகளாக அலைந்த இலட்சக்கணக்கான செயிற்றிய மக்கட்கு எதிராக விதிக்கப்பட்டிருந்த தடைகளையும்கிளின்டன் நீக்கிவிட்டார். இதனால் இப்போது கெயிற்றிய அகதிகள் அமெரிக்காவினுள் நுழைய அனுமதிக்கப் படுகிறார்கள்

எனவே இத்தகைய நிலையில் கெயிற்றிக்கு எதிராக இராணுவத் தலையீடு பற்றி பேச்சுகள் அடிபட்டாலும் இன்னமும் ஒரு திடமான முடிவுக்கு வர முடியாத நிலையிலேயே கிளின்டன் இருப்பதாக கூறப்படுகின்றது.ஏனென்றால் முன்னர் பனாமாத் தீவில் செய்த இராணுவத் தலையீட்டின் போது பெற்ற படிப்பினைகள் சோமாலிய அனுபவங்கள் போவது மிக இலகுவானது. ஆனால் திரும்புவதோ மிகக் கடினமானது என்கிறஎண்ணத்தையே இப்போதைய அமெரிக்க நிருவாகத்திடமும் இராணுவத்திடமும் தோற்றுவித்திருப்பராக தெரிகிறது. ஒருசில கனரக வாகனங்களை மட்டுமே கொண்டுள்ள 7000 (ஏழாயிரம்) துருப்புக்கள் மட்டுமே கொண்டுள்ள கெயிற்றியின் சிறிய இராணுவத்தை சமாளிப்பது இலகுவானது என்றாலும்அதன்பின்என்ன செய்வதுஎன்கின்றகேள்விக்குஇலகுவில் விடைகாண முடியாது என்றே இராணுவமும் நினைக்கின்றது. இராணுவத்தை வெற்றி கொண்டாலும் நாட்டின் மூலை முடுக்குகளில் இயங்கும்ஆயுதம்தாங்கியவன்முறைக் குழுக்களை எவ்வாறு சமாளிப்பது? சனநாயக முறையிலமைந்த அடிப்படை அமைப்புகள் அற்ற ஒரு நாட்டில் அரிஸ்டீட்டை சனாதிபதியாக்கினாலும் பொருத்தமான சனநாயக பாதுகாப்பு ஏற்பாடுகளை எவ்வாறு செய்வது? இதற்கு கெயிற்றி முழுவதும் அமெரிக்கப்படைகள் பரவி முதலில் மனிதாபிமான நிவாரண, மருத்துவ உதவிகளை மேற்கொண்டு நிலைமைகளை தணிவிக்க வேண்டும். இதற்கு குறைந்தது 25,000 படை வீரராவதுதேவைப்படுமென்றுமதிப்பிடப்பட்டுள்ளது. எனவே இத்தகைய பெரும் தொகையில் ஒரு நீண்டகால இராணுவ நடவடிக்கை பெரும் சிக்கலை தோற்றுவிக்கும் என்றே அமெரிக்க தரப்பில் கருதப்படுவதாக தெரிகின்றது.

இதற்கிடையில் அமெரிக்காவில் மிகச் செல்வாக்குமிக்க அரசியல்வாதிகள் பலமிக்க முதலாளிய நிறுவனத்தினர் கெயிற்றியில் தலையிடுவதால் அமெரிக்க நலன்கட்கு ஏதும் கிடைக்கப்போவதில்லை என்றும் அரிஸ்டீட்டின் முற்போக்கு கொள்கைகள் அமெரிக்க நலன்கட்கு உகந்தவையல்ல என்றும் கருதுவதாக தெரிவிக்கப்படுகின்றது. அமெரிக்க இராசதந்திரிகளும் புலனாய்வுத் துறையினரும் அரிஸ்டீட்தொடர்பாக மாற்றுக் கருத்துக்களே கொண்டிருப்பதா தெரிகின்றது.இத்தகைய நிலையிலேஉண்மையானஅமெரிக்க சிந்தனையை பிரதிபலிக்கும் வகையில் கென்றி கிசிஞ்சர் அண்மையில் தானெழுதிய கட்டுரையில் கிளின்டனை மிகக்கடுமையாக விமர்சிக்கிறார் கெயிற்றியிலும் பொசுனியாவிலும் கிளின்டன் கையாளும் அணுகுமுறைகளை பெரிதும் கண்டிக்கிறார். இவர் சொல்ல வருவது என்னவென்றால் கிளின்டனால் அமெரிக்க நலன்களை மையப்படுத்திய ஒரு வெளிநாட்டு கொள்கையை உருவாக்க முடியவில்லை என்பதாகும். பனிப்போரின் பின்னர் பரந்த உலகளாவிய ரீதியில் கோட்பாட்டுரீதியான அச்சுறுத்தலோ புவிசார் அரசியல் அடிப்படையிலான அரசியல் ஆபத்துக்கள் இல்லாத போதும் உலகில் ஆங்காங்கே வெடிக்கும் மோதல்கள் பன்மடங்காக விரிவாகி அமெரிக்க தார்மீக போக்கினை பெரிதும் பாதிக்கின்றது உண்மையானாலும் இவற்றால் அமெரிக்காவிற்கு நேரடி ஆபத்துக்கள் இல்லை என்கிறார். இத்தகைய சூழலை கிளின்டன் முற்றிலும் தவறாக கையாண்டதாக அவர் குறிப்பிடுகிறார்.

கெயிற்றியைஉதாரணம்காட்டும் கிசிஞ்சர் கெயிற்றித்தீவு அமெரிக்காவின் பின்புறமாக அருகில்இருக்கின்றது என்கிற **புவியியல் காரணியை** மட்டுமே காரணமாக காட்டி தலையிட முடியாது. தேவையுமில்லை என்கிறார். கெயிற்றியால் அமெரிக்காவிற்கு எத்தகைய பாதுகாப்பு ஆபத்துக்கள் இல்லாதநிலையில் அமெரிக்க நலன்கள் பாதிக்கப்படாத நிலையில் இராணுவத் தலையீடு அவசியமற்றதுஎன்றும் கருதும் இவர் அமெரிக்க வெளிநாட்டுக் கொள்கை அமெரிக்க நலன்களை மையமாக வைத்து அதனால் நெறிப்படுத்தப்படும்வகையில் அமைய வேண்டும்என்கிறார். எனவே இவ்வாறாக அமெரிக்கதரப்பிலேபல்வேறுமுரண்பாடுகள் தோற்றம் கொடுக்கும் நிலையில் கிளின்டன் அல்லாட நேரிடுகின்றது.

இத்தகைய அல்லாட்டங்களை இன்று ராவுல் செட்ராஸ் மிகக்வனமாக பயன்படுத்துகிறார்.அவர்இப்போது படிப்படியாக அரிஸ்டீட்டின் ஆதரவாளர்களை தீர்த்துக் கட்டி வருகிறார். தனது அதிகாரத்தை பலப்படுத்துகிறார்.போதாக்குறைக்கு இப்போது அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தலையீட்டிற்கு எதிராக கெயிற்றிய மக்களை அணிதிரளுமாறும் கூறி நாட்டில் அவசரகால நிலையை பிரகடனம் செய்து அமெரிக்க தலையீட்டிற்கு எதிராக போராடுவேன் என போர்க்குரல் எழுப்பி வருகிறார். எனவே இத்தகைய நிலையில் அமெரிக்க நிருவாகம் அடுத்து என்ன செய்யப்போகின்றது என்பதை அகில உலகமும் அவதானித்து கொண்டிருக்கின்றது. ஏனென்றால் மனிதாபிமான தார்மீகம் பற்றி அதிகம் அமெரிக்கா போதித்ததால் ஏற்பட்ட விளைவு இது. இன்று ஒரு மிகச்சிறிய வறிய நாட்டின் தலைவரான அரிஸ்டீட் அமெரிக்க மனச்சான்றிற்கு விடப்பட்ட சவாலாகிவிட்டார் புதிய உலக ஒழுங்கில் நாம் காணும் புதுமை இது.

,,புவியியல் ரீதியாக கெயிற்றி எமக்கு அருகிலிருக்கின்றது என்பதால் மட்டும் இராணுவத் தலையீடு செய்ய முடியாது. பனிப்போரின் பின்னான காலகட்டத்தில் பரந்த உலகளாவிய அளவில் தத்துவ ரீதியிலான அச்சுறுத்தல்களோ புவிசார் அரசியல் அடிப்படையிலான பெரும் ஆபத்துகளோ இல்லாத நிலையில் அமெரிக்க நலன்கள் பாதிக்கப்படுவதை மையமாக வைத்தே எமது வெளிநாட்டுக் கொள்கை அமைய வேண்டும்.''

-முன்னாள் அமெரிக்க வெளிவிவகாரச் செயலர் கென்றிகிசிஞ்ஞர்

# ஐ. தே. கவில் இரண்டாம் இடம் யாருக்கு?

# காமினிதிசாநாயக்கா மீண்டும் ஏமாற்றப்படுவாரா?

காமினி திசாநாயக்கா மீண்டுமொரு முறை ஐ.தே.கவினால் ஏமாற்றப்பட்டுவிட்டாரா? அல்லது ஐ.தே.க. தற்போது ஒரு அரசியல் பூச்சாண்டி காட்டுகின்றதா? இக் கேள்விகள் இப்போது கொழும்பு அரசியலரங்கில் மேற்கிளம்பியுள்ளன.

பலவிதமான எதிர்பார்ப்புகளுடன் ஐ.தே.கவினுள் புகுந்து கொண்ட காமினி திசாநாயக்கா கடுகதி வேகத்தில் தனது நடவடிக்கைகளை மேற்கொண்டது தெரிந்ததே. ஆனால் ஆரம்பித்த அதே இடத்திலேயே அவரது கடுகதி தடம் புரண்டு போயிருப்பதுதான் கவனத்திற்கு உரியது.



பலவிதமான சிரமங்களுக்கு மத்தியில், தேசிய பட்டியல் மூலம் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை காமினி திசாநாயக்கா பெற்றுக்கொண்டார் எனினும் பதவியேற்பு வைபவத்தை தொடர்ந்து அவரது ஆதரவாளர்கள் எமது அடுத்த ஜனாதிபதியே வாழ்க (அபே மீளக ஜனாதிபதிதுமாட்ட ஜயவேவா) எனக் கோஷம் எழுப்பியதும், அதனையடுத்து காமினி மேற்கொண்ட நடவடிக்கைகளும் சுகடங்களையும், முகச்சுளிப்புக்களையும் சம்பாதித்துவிட்டது என்றே கூறலாம்.

காமினியின் பிரவேசத்தால் பீதியுற்ற பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனாவை சந்தித்து இரகசியப் பேச்சு நடத்தினார். தென்கொரியாவிற்கு பிரதமர் ரணில் விஜயம் செய்திருந்த வேளையில் அமைச்சரவையில் மாற்றம் செய்ய ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கா போட்டிருந்த திட்டத்தை முறியடிப்பதில் ஜே.ஆர்-ரணில் சந்திப்பு பெரிதும் உதவியுள்ளது எனலாம்.

### டி.பி.யின் இதயத்திலிருந்து வந்த பதில் அல்ல

காமினியின் வருகைக்காக காட்டப்பட்ட முதலாவது பெரிய எதிர்ப்பு இதனைக் கருதமுடியும். காமினியின் வசதிக்காக - காமினியின் விருப்பத்திற்கேற்ப - அமைச்சரவையில் மாற்றம் ஏற்படுத்த முடியாமை ஜனாதிபதி டி.பி. விஜேதுங்காவை ஒரு திரிசங்கு நிலைக்குத் தள்ளியது. இந்த சந்தர்ப்பத்தில் தான் அநுராதபுரத்தில் கட்சி அமைப்பாளர்களுக்கான கூட்டமொன்று இடம்பெற்றது. அதில் கலந்து கொண்ட ஒருவர் அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் யார் என்ற கேள்வியை ஜனாதிபதி டி.பி. விஜேதுங்காவிடமே கேட்டுள்ளார். அதற்குப்பதிலளித்த டி.பி. விஜேதுங்கா ''அடுத்த தேர்தலில் நான் தான் போட்டியிடவுள்ளேன். ஏன் என்னை நீங்கள் விரும்பவில்லையா?'' என நகைச்சுவையுடன் பதில்கேள்வி எழுப்பினார். ஆனாலும் நாங்கள் கேட்பது அடுத்த தேர்தலைப் பற்றியல்ல. ஐ.தே.கவில் நம்பர் இரண்டு யார் என்பதேயாகும் என ஒரு உறுப்பினர் மீண்டும் கேள்வி எழுப்பியுள்ளார். ரணில் தான் இரண்டாம் இடத்தில் இருக்கிறார் என டி.பி. விஜேதுங்கா கூறினாராயினும் இது அவரது இதயத்திலிருந்து வந்ததாகக் கருதப்படவில்லை. ஏனெனில் காமினியின் பதவியேற்பைத் தொடர்ந்து டி.பி. விஜேதுங்கா தனது கையை நீட்டி அபிவிருத்தித் திட்டங்களை காட்ட நான் உங்களின் பின்னால் வருகிறேன் என்று காமினி கூறுவதாக சித்திரிக்கும் சுவரொட்டிகள் மத்திய மாகாணத்தில் பரவலாக ஒட்டப்பட்டு இருந்தது. இச்சுவரொட்டிகள் ஒட்டப்பட்ட ஒரிரு தினங்களின் பின்னரே ஜனாதிபதி அநுராதபுரத்தில் ஐ. தே. கவின் நம்பர் 2 ரணில் தான் என்று கூறியதும், இச்சுவரொட்டிகள் ஒட்டப்படுவது நிறுத்தப்பட்டது. இதனால் காமினி ஓரளவுக்கு அதிர்ச்சி அடைந்ததாகக் கூறப்படுகிறது.

### டி. பியும்காமினியும் ஜே. ஆருக்கு கண்ணாமூச்சி

இதேவேளை காமினியும், டி.பியும் சேர்ந்து ஜே.ஆர். ஜெயவர்த்தனாவுக்கு கண்ணாமூச்சி காட்டுவதாகவும் கூட கூறப்படுகிறது. பிரேமதாசா விசுவாசிகளினது விருப்பத்திற்கு மாறாக அவர்களது பகிரங்க எதிர்ப்பிற்கு மத்தியில் காமினியை முன்னிலைப்படுத்த டி.பி. விஜேதுங்கா முற்படுவதையும், எதிர்கால தலைமைப் பதவி காமினிக்கு சேருவதில் இருக்கும் சங்கடங்களையும் சீர்தூக்கிப் பார்க்கும்போது இச்சந்தேகம் எழுவது தவிர்க்க முடியாததுதான். பலவீனமடைந்துள்ள கட்சியின் இன்றைய நிலையில் காமினியை அடுத்த தலைவர் என்ற பொறுப்புக்கு உயர்த்தினால் கட்சி தோல்வியுறுமாயின் அதற்கான முழுப் பொறுப்பையும் காமினியும், டி.பி.யுமே ஏற்க வேண்டியிருக்கும். எனவே தான் தோல்விக்கான பொறுப்பை ஏற்பதில் ரணிலுக்கும் பங்கு இருக்க வேண்டும்என்பதேடி.பி. விஜேதுங்காவின்மறைமுகமான திட்டமாகவுள்ளது எனக் கூறப்படுகின்றது.

அதாவது அடுத்த ஜனாதிபதி தேர்தல் ஐ. தே.கவிற்கு சோதனை மிகுந்ததாக இருக்கும் என்றும், எனவே இத்தேர்தலில் போட்டியிடுவதிலிருந்து விலகி பின்னணியில் செயற்படுவது பற்றி ஜே.ஆர். ஜெயவர்த்தனா ரணிலுக்கு வழங்கிய ஆலோசனைக்கு டி.பி. விஜேதுங்கா இவ்வாறு பதிலடி கொடுத்துள்ளார் எனலாம். இது உண்மையாக இருக்குமெனின் ஜே.ஆரின் அரசியல் சாணக்கியத்திற்கு தானும் சளைத்தவன் அல்ல என்பதைக் காட்டும் வகையில் டி.பி. விஜேதுங்கா விடுத்துள்ள ஒரு சவால் என்பதில் மிகையில்லை. இதில் ஜே.ஆரின் சாணக்கியமா? அல்லது டி.பி.யின் தந்திரமா? வெல்லும் என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

இந்த இடத்தில் 1977ஆம் ஆண்டின் தேர்தல் வெற்றியை தொடர்ந்து ஐ.தே.கவில் இரண்டாம் இடம் யாருக்கு என்ற போட்டி ஏற்பட்டிருந்த சூழ்நிலையை மீட்டுப் பார்ப்பது பொருத்தமானதாகும். காமினியும், லலித்தும் இரண்டாமிடத்தைப் பெற்றுக் கொள்வதற்காக முண்டியடித்துக் கொண்டிருந்த வேளையில் பிரேமதாசா மிக நுணுக்கமாக திட்டமிட்டு செயற்பட்டு முன்னிலைக்கு வந்தது தெரிந்ததே. முக்கியமான அமைச்சுப் பதவிகள் காமினி மற்றும் லலித்திற்கு வழங்கப்பட்டிருந்த போதும் கூட தமக்கு வழங்கப்பட்ட உள்ளூராட்சி மற்றும் வீடமைப்பு அமைச்சின் மூலம் குறுகிய காலத்தில் பிரேமதாசா மக்கள் மத்தியில் மிகவும் பிரபலமானவராக மாறிக் கொண்டார். இதனாலேயே தவிர்க்க முடியாத வகையில் 1978இல் ஜே. ஆர் ஜனாதிபதியாகிக் கொண்ட போது பிரேமதாசா பிரதமர் பதவிக்கு நியமிக்கப்பட்டார். பிரதமர் நியமனம் வழங்கப்பட்ட போதும் பிரேமதாசாவின் அமைச்சுப் பொறுப்புகளில் எந்த மாற்றமும் செய்யப்பட்டிருக்கவில்லை.

**நிமல்ராஜன்**


ஜே.ஆர். பதவியிலிருந்து ஒதுங்க தீர்மானித்திருந்த சூழ்நிலை மிகுந்த அச்சுறுத்தல்கள் நிரம்பியதாக இருந்தது. ஜே.வி.பியினரின் மிரட்டல்கள் ஒருபுறமும், இந்திய இராணுவத்தின் பிரசன்னம் மறுபுறமும், தேர்தலுக்கான உட்கட்சிப் போட்டியும், ஏனைய வேட்பாளர்களின் சக்தியும் இன்னுமொரு புறமுமாக பல அச்சுறுத்தும் சூழ்நிலைகளுக்கு மத்தியிலேயே 1988ஆம் ஆண்டின் ஜனாதிபதி தேர்தல் இடம்பெற்றது.

ஐ. தே. கவில் போட்டியிட விரும்பிய பலரும் ஒதுங்கிக் கொண்ட சூழலில் பிரேமதாசா மிகவும் நுட்பமாக சவால்களுக்கு முகம் கொடுத்து ஜனாதிபதியானார்.

### கூரேக்கு இரண்டாமிடம் பிரேமாவின் விருப்பம் அதுவே

பிரேமதாசா ஜனாதிபதியானதும் ஐ. தே. கவின் இரண்டாம் இடம் யாருக்கு என்பது குறித்து மீண்டும் சலசலப்புகள் ஏற்பட்டது. காமினி, லலித், சிறிசேன கூரே போன்றோரின் பெயர்கள் பலமாக அடிபட்ட போதும் சிறிசேன கூரேக்கு இரண்டாமிடம் வழங்கவே பிரேமதாசா விரும்பியிருந்தார். ஆனாலும் சிறிசேன கூரே இவ்வாறு உயர்த்தப்படுவதை ஜே. ஆர். விரும்பாதமையாலும், காமினி, லலித் போன்றோரை முன்னணிக்கு கொண்டுவர பிரேமதாசா விரும்பாத நிலையில் இந்தச் சூழ்நிலையை சமாளிக்கும் விதத்தில் டி. பி. விஜேதுங்கா பிரதமரானார். ஒரு வருடத்திற்கு மட்டுமே பிரதமர் பதவி என்றும், அதன் பின் மீள் பரிசீலனை செய்யப்படுமென்றும் கூறப்பட்டபோதும் கூட பிரேமதாசா இருக்கும்வரையில் டி. பியே பிரதமர் பதவியில் நீடித்தார். அத்துடன் காமினி, லலித் போன்றோரின் முக்கியத்துவம் அமைச்சரவையில் திட்டமிட்டுக் குறைக்கப்பட்டது. தொடர்ந்தும் பிரேமதாசா மேற்கொண்ட நடவடிக்கைகள் காமினி, லலித் போன்றோரை கட்சியை விட்டு வெளியேறும் அளவுக்கு இட்டுச் சென்றிருந்தது பழைய கதை.

ஆனால் பிரேமதாசாவின் மறைவைத்தொடர்ந்து காமினி மீண்டும் ஐ. தே. கவில் இணைந்து கொண்டார். மத்திய மாகாண சபையில் அங்கம் வகித்த காமினி திசாநாயக்காவை அங்கு முதலமைச்சராக்க நடவடிக்கை எடுத்த போதும் மத்திய மாகாண முதல்வர் டப்ளியூ. எம். பீ. பீ. திசாநாயக்காவின் எதிர்ப்பைத் தொடர்ந்து அவருக்கு அப் பதவி கிட்டும் வாய்ப்பு கை நழுவிப் போனது. தொண்டமானின் ஆதரவுடன் மத்திய மாகாண முதல்வராக காமினி திட்டமிட்டதும் கைகூடாமற் போயிற்று.



### காமினியின் எதிர்பார்ப்பு பூரணமாக நிறைவேறுமா?

இதனைத் தொடர்ந்து ஏற்பட்ட சிக்கல்களின் பின்னர் காமினி பாராளுமன்றத்துள் நுழைவதில் வெற்றி பெற்றுள்ளார். எனினும் இவரது இந்த வெற்றி கூட அவரின் எதிர்பார்ப்பை விட குறைவானதாகவே உள்ளது. காமினியின் வருகைக்கு எதிராக எழுந்துள்ள எதிர்ப்பானது காமினி அமைச்சரவைக்குள் நுழைவதுஇலகுவானதல்ல என்பதைக் காட்டுகிறது எனலாம். இதனால் காமினி இப்போது பின் வரிசையில் ஒதுங்க வேண்டி ஏற்பட்டுள்ளது. சிலவேளை காமினி அமைச்சரவைக்குள்புகுந்துகொள்ளக்கூடும். ஆனால் அவர் எதிர்பார்க்கும் வேகத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொள்வாரா என்பதே முக்கியமானதாகும். இதில் எந்தளவுக்கு அவர் வெற்றி பெறுவார் என்பது அவரது திறமையிலும் முயற்சியிலும் மட்டும் தங்கியிருக்கவில்லை. அவரை எதிர்ப்போரின் ஆற்றலிலும் இது தங்கியுள்ளது.

## பனிப்போர் முடிந்தும் உளவு வேலை தொடர்கிறது

வேவு பார்த்தல் ஒரு சர்வதேச விவகாரம். கெடுபிடி யுத்தம் முடிவடைந்து விட்டது என்ற ஒரு காரணத்தினால் வாஷிங்டனும் மொஸ்கோவும் ஒருவர் மற்றவரது இரகசியத்தை அறிந்து கொள்ளும் முயற்சியைக் கைவிட்டு விட்டதாகக் கருதிவிட முடியாது. மார்ச் மாதத்தில் அமெரிக்கா ரட்டை உளவாளியான அல்ரிச்ஏம்ஸ் கைது செய்யப்பட்டது இதற்கு ஒரு சான்றாகும்.

வேவு பார்ப்பது என்பது சுருங்கக் கூறின் வாழ்வின் ஓர் அம்சமாகும். ஒரு வகையில் உண்மைத் தகவலை சேகரிப்பதாகும். அணு ஆயுதங்களை உற்பத்தி செய்யக் கூடிய அல்லது அணு ஆயுத நிபுணர்களை உருவாக்கக் கூடிய வளர்முக நாடுகள் மேற்கு நாடுகளின் வேவு பார்க்கும் இலக்குகளாக விளங்குகின்றன.

பாகிஸ்தான், இந்தியா ஈராக், ஈரான், லிபியா மற்றும் மிகப் பிரபலம் பெற்று விளங்கும் வட கொரியா ஆகியன இந்த இலக்குகளில் அடங்குகின்றன. ஆனால் உண்மைத் தகவல்களைச் சேகரிப்பதில் உத்தேச நண்பர்களையும் பகைவர்களையும் பற்றிய செய்திகளைச் சேகரிப்பதும் அடங்குகிறது.

பிரான்சும் அமெரிக்காவும் சமீபத்திய வருடங்களில் ஒன்றை ஒன்று வேவு பார்த்துள்ளன. பிரிட்டனும் அமெரிக்காவும் வானொலிச் செய்திகளை அவதானித்து பெற்றுக் கொண்ட தகவல்களை ஒன்று சேர்த்து ஆராயும் அதேவேளையில் பிரிட்டனில் அமெரிக்க விமானத் தளங்களையும் வேவு வசதிகளையும் வைத்திருப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வரும் இடதுசாரி பிரிட்டிஷ் குழுக்கள் பற்றி வாஷிங்டன் வேவு பார்த்துள்ளதாகவும் கருத்துக்கள் தெரிவிக்கப்படுகின்றன.

பகிரங்கத்தில் வேவு பார்க்கும் நடவடிக்கைகள் பற்றிய உத்தியோக பூர்வ கருத்துரையின் அளவு இயல்பாகவே மிகச் சிறியதாகக் காணப்படுகிறது. குறிப்பாக (11 ஆம் பக்கம் பார்க்க)

யாழ்ப்பாணம்
நல்லூர் கிளைநூலகம்.

# சிறுகதை

# இவர்கள்....

அந்தக் காலைக் கதிரவன் பளீர் என கன்னத்தில் அறைவது போல் உணர்வு. இன்றைய விடியல் எனக்குப் பிடிக்கவில்லை. மனம் சங்கடப்பட்டது. சைக்கிள் மிதித்து வீதியால் திரும்பி அதோ ம் அதுதான் வீடு ஊன்றி மிதிக்க கால் படபடத்தது, நடுங்கியது. இதயம் கனத்தபடி வீடு கிட்டக் கிட்ட

ஐயோ என்ரை ராசா நான் பெத்த வண்ணமலரே . ஓ... ஓ என்ர ராசா. ஒப்புச் சொல்வதும், ஊதுபத்தியின் மணம் பூ வாடிய மணம் அதற்கு மேலாய் அந்த உடலின் மணம்... ஒரு கலவையாய் சாவீட்டின் அவலத்தை இறுக்கமான துன்பத்தை வீட்டில் இருத்தி வைத்து நின்றது. மெல்ல அவ்வீட்டினுள் கால் வைக்கின்றேன். கால்கள் சோர்ந்துஉதறிக் கொண்டது. இதயம் சுருண்டு வாய்க்குள் அடைத்தது போல் கிட்டக் கிட்ட 'திக்திக்' இதயம் தாளம் பிசகி அடித்து காதுமடலைச் சூடாக்கியது.

என்னைக் கண்டுவிட்டாள் வாசுவின் தாய் கூட அவன் நான்கு சகோதரிகளும் சின்னத் தம்பியும் . ஐயோ சங்கர் என்ரை பிள்ளையைப் பார் அப்பு... ஐயோ என்ர செல்வத்தைப் பார்... இரண்டு பேரும் ஒன்றாத் திரிஞ்சியளே...' ஓ என்று விம்மிய அம்மாவின் தலை என் நெஞ்சில் மோதியது-

'ஐயோ அண்ணாவைப் பாருங்கோ!'

'ஐயோ தம்பியைப் பாருங்கோ!'

அந்தச் சகோதரியின் கதறல் சின்னத் தம்பியின் விம்மல் . என்ர ஆண்டவா! இது என்ன சோதனை என என் மனம் அடித்துக் கொள்ள வாசு கிடத்தப்பட்ட வாங்கிலை அண்மிக்கின்றேன்.

வாசு எப்படி மச்சான் இவ்வளவு வடிவாய் சிரித்தபடி... அதே சிரிப்பு அதே சிவந்த நிறம் கறுத்த வடிவான மீசை .. வாசு நீ செத்திட்டியா? ஓ என மனம் குந்தியிருந்து கதறியது.

அவர்கள் தொடர்ந்தும் கதறுவதும் அழுது ஓய்வதுமாக இருந்தனர். ஊதுவத்தியின் மணம் தலையிடித்தது எனக்கு. வாசு பச்சையுடுப்புக்கு எடுப்பாய் இருந்திருப்பான். அவன் உயிருள்ள சிரிப்போடு உயிரற்றுக் கிடந்தான். பார்க்கப் பார்க்க விசராக் கிடக்குது எனக்கு. அப்படியே அவனைப் பார்த்த வண்ணம் இருந்த என்னைத் தாயின் ஒப்பு பழையதை மீட்பது போல் அமைந்தது.

வெள்ளை உடுப்போட என்ற ராசா......

சீவிச் சிங்காரிச்சு போகையில...... ஐயோ......

பார்த்துப் பார்த்து நின்ற நான் பாவி .....

நான் பாவி......

பச்சை உடுப்போட வீர சொர்க்கம் போயிட்டியோ... வீரனாய்ப் போயிட்டியே... ''அம்மா அழாதையுங்கோ வாசு நல்ல சாதனையோட வீரச்சாவடைஞ்ச போராளி; அவருக்கு இப்படி அழுகிறது பிடிக்கா''எனத் தன் தாயை அணைப்பதுபோல்அணைத்து ஆறுதல் சொன்னஅந்தப் போராளியைப் பார்க்கிறேன். ''நாங்க இரிக்கமம்மா'' மற்றவன் அருகில் வந்தான். நான் அவர்களைப் பார்த்து பெருமைப்பட்டேன்.இவர்கள் வேறு வேறு இடத்துப் பெடியள் ஒன்றாய் ஒற்றுமையாய்.. .. பெருமூச்சு ஒன்றை வெளிப்படுத்தியது என் ஆற்றாமை.

டண் டனக்கு டணார் டணார்... ஏலுமா ஏலாத . வாறியா .... போறியா ..... தோல்வியா...... இரு பாடசாலைகளின் வெற்றி தோல்விகள் வீதியில் அப்பட்டமானது. பாடசாலைக் கொடி பிடித்தபடி வீதியால் ஆவேசமாக கத்தியபடி பள்ளிக்கூடப் பெண்பிள்ளைகளைக் கண்டவுடன் உச்சஸ்தாயில் ......

டண் டனக்கு டணார் டணார் ..... முன்னணியில் வாசு என்று அழைக்கப்படும் சிவச்சந்திரனும் நானும்.

சிவா அப்பள்ளியின் முதன்மை மாணவன். விளையாட்டில் வலு கில்லாடி. நாடகம், பாட்டு என்றால் அத்துப்படி அவனுக்கு. இவனை யாருக்குத் தான் பிடிக்காது? எதிர் அணிகளுடன் கூட ரியூசனில் தோள் மேல் கைபோட்டு சிரிச்சுப் பேசுவான். ஜாலக்காரன் எத்தனை பகிடிகள் சேட்டைகள். அந்தப் பருவத்தில் உயர்ந்த சிவந்த தோற்றமும் வயதுக்கு மீறிய வளர்ச்சி. அழகான மீசை அவனுக்கு.அதுசம்பந்தமாய்பெருமை ஏன் அந்த இடத்து கதாநாயகன் கூட அவன்தான். வீதியால் போகேக்க பொம்பிளைகளை விட மோசமாக மௌனித்து நல்ல பிள்ளையாய் போவான். பள்ளிக்கூடத்துக்குள் போன பின் தூள்கிளப்புவான். முதல்தர வம்புக்காரன்.ஆனால் திறமையானவன். அந்த சிவாவுக்கு வடிவான அமைதியான நல்ல ஒரு காதலியும் உண்டு. இவனில உசிரையே வைச்சிருந்தது அந்தப் பெட்டை.

சிவா அண்டைக்கு வகுப்பறையில... .. ''என்ன மச்சான் இப்படி ஏன் இருக்கிறீர் ஆள் சந்திக்கயில்லையோ ...?''

'அதில்ல மச்சான் இரண்டு மாக்சால எனக்கு என்றன்ஸ்' இல்லாமல் போனதால வீட்டாக்கள் துடிச்சுப் போட்டுதுகள்'' எனப் பெருமூச்செறிந்தபடி தொடர்ந்தான்.

''வீட்டில அப்பர் இருந்தால் இப்படி நடக்காது நல்லவேளை இரண்டு அக்காவும் முடிச்சிட்டினம் தங்கச்சியும்தம்பியும் என்றகணக்கு'. தொடர்ந்து கூறியவன் என்ர குடும்பத்தினர என்ர அக்கா என்ர தங்கச்சி ? என்று கதைச்சு கதைச்சு மீண்டும் விழுந்து விழுந்து படிக்கத் தொடங்கியவனின் திடீர்மாற்றம் கொஞ்சநாள் சிவா ஒரு மாதிரித்தான் நடந்தான். போக்கு வாக்கு வித்தியாசம் சிலவேளை தனக்குள் ஆழ்ந்து போவான்.

வகுப்பு, விளையாட்டு பகிடி ஏன் அந்தச் சிரிப்பு 'ஸ்ரயில்'... எல்லாம் மறந்து .. சிவா சிவா என்று உயிரை விடும் அவனின் சந்திப்பும் குறைந்து எல்லாமே தொலைந்து வெறுமையாயின ..

கடைசிச் சந்திப்பு நல்ல ஞாபகம் எனக்கு. சிவா திடீர் என வந்து நின்றான்.

''என்ன மச்சான் இந்த நடுச்சாமத்தில்'' என நான் வினாவ ''மச்சான் நான் நாடக வசனம் பேசிறதா நினைக்காத'' என்றவன் தொடர்ந்தான்...

'எனக்கு இப்பதான் யதார்த்தம் புரிஞ்சிது நான் என்ன செய்ய வேணும் என்று விளங்குது.அண்டைக்கு அந்த இயக்கப் பொடியனைத் தூக்கக்க என்ர கையில கடசி மூச்சை விட்ட எ கேயோ பிறந்து எப்படியோ வளர்ந்து இங்க வந்து செத்த இந்தப் பெடியன் சொன்னது எங்கட சனம் கிளாலியில வெட்டுப் படக்க நேர நான் அடுத்த போட்டில போகக்க பார்த்தது காயப்பட்டவயின்ர கதறல்..' என்று தனக்குள் ஆழ்ந்து கூறிக்கொண்டு போனது சிவா தானா? என ஒருக்கா அவனைத் தொட்டுப் பார்த்துக் கொண்டேன்.

''மச்சான்'' சூடாக அவனை அழைத்தேன், அவன் நோக்கம் புரிந்தது எனக்கு. என்னைத் திரும்பிப் பார்த்தான் .. ''மச்சான் தங்கச்சியவளவ தங்களைத் தாங்கள் பார்க்கட்டும் அவளவ சுழியன்கள் படிப்பில ஓ அம்மா .. தான் '' எனத் தொடர்ந்தவன் கண்கள் சிவப்பது அந்த நிலவொளியில் தெரிந்தது.

''டேய் விசரா அவன். உன்ர அவளை நினைச்சியே'' எனக் கேக்க வெடுக்கென அதிர்ந்து நிமிர்ந்தவன் கிட்டத்தட்ட அழும் நிலைக்கு வந்தவன் என்னை இறுக அணைத்தபடி... 'அவளிட்ட சொல்லு மச்சான் நான் உயிரோட வந்தால் அவளைத் தான்...' இறுக என் முதுகில் குத்தி .. எல்லாம் வெல்லலாம் நான் வாறன் என ஒரே மிதியாய் சைக்கிலை மிதித்து வீதியால் ஏறி ..

''ஓ என்ர ராசா... தாயின் கதறல் தொடர்ந்தது அட இப்பத்தான் கவனிச்சன் குறுப்பொன்று வரிசையாய் அஞ்சலித்தபடி ''அது யார்? . அவள் மாதிரி அட சிவா இது என்ன? இது அவளோ? அவள் வடிவான வெள்ளப் பெட்டை எல்லோ

**சி. செந்தீஸ்**

நீண்ட முடி .. சீ அவளா இராது சிலவேளை நான் சனகாலமாய் கொழும்பில் இருந்ததால் அடையாளம் தெரியாமல் போனதோ?'' அந்த அவள் துயர மாலையை முழுங்கியபடி கண்ணீரை அடக்கி சிவந்த கண்களுடன் இறுகப் பற்றிய துப்பாக்கியுடன் நிமிர்ந்து நின்றாள். அட ஆண்டவா சிவா என்ன மச்சான் இது .அது அவளேதான் உன்ர அவளேதான். அழக் கூட இல்லை அவள். என்ன மென்மையான பெட்டையெடா நீ போனதற்கு என்ன அழுகை அழுதது. இப்ப .?'' எனது மனம் மானசீகமாக சிவாவுடன் உரையாடியது. ஓ சிவா நீ கொடுத்து வைத்தவன் அவளும் உன்னை மாதிரியேதான் 'என்னஒரு ஆக்களடா நீங்கள்' எனக்கு நெஞ்சு நிமிர்ந்து கொண்டது சோகம் கழன்று எனக்கும் உசார் பிறப்பது போல் ஒரு பிரமை.

# சிங்கப்பூரில் ஒரு பிரம்படித் தண்டனை; அமெரிக்க உறவில் உண்டான கரும்புள்ளி

சிங்கப்பூர் நீதிமன்றம் இளைஞன் ஒருவனுக்கு விதித்த பிரம்படித் தண்டனைத் தீர்ப்பானது அமெரிக்காவில் பெரும் பரபரப்பைஏற்படுத்தி உள்ளதுடன் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளில் விரிசல் நிலையைத் தோற்றுவிக்கும் அளவிற்கு பெரும் பூதாகாரமாக உருவெடுத்துள்ளது.

வீதிகளில் சிகரெட்டின் அடிக்கட்டையைப் போட்டாலே 500 வெள்ளி தண்டம் அறவிடும் சிங்கப்பூர் கார்களின் நிறங்களை மாற்றினால் மட்டும் சும்மா விட்டுவிடுமா என்ன?

சின்னக் குற்றங்களுக்கே கூடுதலான தண்டனைகளை விதிப்பதால்தான் அங்கு குற்றச் செயல்கள் குறைந்திருப்பதாக அந்நாட்டு அரசு நம்புகின்றது.எனினும் இவ்வாறு கடும் தண்டனை விதிக்கப்படுவது குறித்து தற்போது அமெரிக்காவில் பெரும் சர்ச்சை கிளம்பியுள்ளது. இதற்குக் காரணம் அமெரிக்க இளைஞருக்கு சிங்கப்பூர் அரசு தண்டனை வழங்கி தீர்ப்பளித்தது தான். அந்தத் தண்டனைக்குரிய அமெரிக்கமாணவனின் பெயர் மைக்கேல்வே பதினெட்டு வயதான இவன் தனது சக நண்பர்களுடன் சேர்ந்து சிங்கப்பூரில் ஐம்பது வரையான கார்களுக்குவிளையாட்டாக வர்ணங்களைத் தெளித்தது தான்இவன்செய்த குற்றம்.

அமெரிக்காவில் பிறந்து சிங்கப்பூரில் கல்விகற்றுக்கொண்டிருக்கும்இவனைகைதுசெய்த பொலிசார் கார்களின் வர்ணங்களை மாற்றியதாக குற்றம் சுமத்தி நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர்.

மைக்கேலுக்கு நான்கு மாதச் சிறைத் தண்டனையும் 2220 டாலர்கள் அபராதமும் விதித்த நீதிமன்றம் கூடவே ஆறு பிரம்படிகளையும் வழங்குமாறு தீர்ப்பளித்தது. தகவல் அமெரிக்காஎங்கும் காட்டுத்தீ போல் பரவியது. முடிவு அமெரிக்கா எங்கும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியதுடன் சர்ச்சைகளையும் தோற்றுவித்தது.

செய்த தவறுக்கான தண்டனை அதிகமானது எனகுறிப்பிட்ட அமெரிக்க ஜனாதிபதி கிளிண்டன் பிரம்படிதண்டனையை உடனடியாகநிறுத்துமாறும் சிங்கப்பூர் அரசிற்கு அவசரவேண்டுகோள்ஒன்றை விடுத்தார். அமெரிக்க ஜனாதிபதியைக்கூட இந்த பிரம்படித் தண்டனை தைத்துள்ளது என்றால் அதன் தாக்கம் எவ்வளவு ஆழமானது என்பதை எவரும் எளிதில் புரிந்து கொள்ளலாம். ஆயினும் அமெரிக்க ஜனாதிபதியும் இவ் விடயத்தில் உடனடியாக தனது எதிர்ப்பைத்தெரிவித்திருந்ததில் நியாயம் இல்லாமல் இல்லை.

> இழந்தவர்கள் அடைகின்றவேதனைகளையும் பலவிதங்களிலும் சந்திக்கும் பிரச்சினைகளையும் தவறிழைப்போர் உணரும்படிசெய்தால் அவர்கள் நிரந்தர தெளிவுள்ளவர்களாகத் திருந்துவர். இந்த உணர்த்துதல் இல்லாமல் வெறுமனே தண்டனை கொடுப்பதில் தற்காலிக பலனே கிடைக்கும் என்கிறார் சிங்கப்பூர் உளவியலாளரான நன்னன்.

குழந்தைகள் விடும் தவறுகளுக்காக அவர்களைத் தண்டிப்பதற்காகப் பெற்றோர் பிரம்படித் தண்டனை வழங்குவது போன்றதே இதுஎன்று யாரும் எண்ணி விட்டால் அது தவறானது. இப்பிரம்படியில் அன்பு கலந்த கண்டிப்பு இருக்கும்.

ஆனால் சிங்கப்பூர் அரசு வழங்கும பிரம்படித் தண்டனை அனைவரது கற்பனைக்கும் அப்பாற்பட்டது அனுபவித்தால் மட்டுமே அதன் வேதனையைப் புரிந்து கொள்ளமுடியுமே அன்றி வெறும் வார்த்தையில் விபரித்துவிட முடியாது.

இத்தண்டனையை வழங்குவதற்கென விசேடமாக சிறந்த உடற் கட்டும், தோள் வலிமையும், மிடுக்கான தோற்றமும் கொண்ட அதிகாரி தேர்ந்தெடுத்து நியமிக்கப்பட்டிருப்பார்.

முகம் முழங்காலைப்பார்க்கத்தக்கவாறு கம்பியின் மேலால் குனிந்து நிற்கவிட்டு இருகால்களும் ஒன்றிணைத்து இறுக்கமாக கட்டப்பட்ட நிலையில் கைகளும் இழுத்துக் கட்டப்பட்டு அசைய முடியாதவாறு குற்றவாளியை நிறுத்திவிட்டு அதிகாரி கையில் பிரம்பை எடுத்து தங்கள் உடல் பலத்தை எல்லாம் கையில் ஒன்று திரட்டி மூச்சை இழுத்துப் பிடித்துக் கொண்டு பிரம்பை கூடுமான வரையில் மேலே உயர்த்தி குதிக்காலில் எழும்பி மனஂச

**தொகுப்பு**
**சசிகரன்**

ஒருமுகப்படுத்தி அடித்தால் அந்த இடத்தில் இரத்தம் பீறிட தோலும் சதையும் பிய்ந்து தொங்கும்.

இப்படியாக பள்ளி மாணவனான மைக்கேலுக்கு ஆறு அடிகள் வழங்க தீர்ப்பளிக்கப்பட்டால் பெற்றோர் மட்டுமா திணறுவார்கள். அமெரிக்க ஜனாதிபதி கூட அல்லவா திணறிவிட்டார்.

(8ஆம் பக்கம் பார்க்க)

## சிங்கப்பூரில்

நாகரிகமும் மனிதப் பண்பாடும் வளர்ந்து விட்டதாக நம்பப்படும் இந்தக் காலத்தில் இப்படி ஒரு குரூரத் தண்டனையை அனுமதிக்கலாமா என்பதுதான் அமெரிக்க மக்களின் ஏகோபித்த கேள்வியாக அமைந்திருந்தது.

மைக்கேல்வேயின் அப்பா ஜார்ஜ்வே அமெரிக்காவின் பெரிய நிறுவனம் ஒன்றில் பெரிய பதவியில் இருப்பவர். மகன் இருப்பதுதான் சிங்கப்பூரில். தாயார் - ராண்டி சான் இவர்கள் இருவரும் மிகுந்த சோகமே உருவாகக் காணப்படுகின்றனர்.

தண்டனையை நிறுத்துமாறு அமெரிக்கா பல வழிகளிலும் கோரிக்கை விடுத்தது. அமெரிக்க வெளிநாட்டு இலாகா துணை மந்திரி வின்ஸ்டன் லார்ட் அமெரிக்காவுக்கான சிங்கப்பூர் தூதுவர் எஸ். ஆர் நாதனை அழைத்து அமெரிக்காவின் கவலையைத் தெரிவித்தார்.

இரு நாடுகளுக்கும் இடையில் பலத்த விரிசல் ஏற்படும் நிலை உருவாகும் அளவிற்கு பிரம்படித் தண்டனை பெரும் பரபரப்பை ஏற்படுத்திக் கொண்டிருந்த போதிலும் சிங்கப்பூர் அரசு அதற்கு செவிசாய்க்கவில்லை.

திட்டமிட்டபடி இத்தண்டனை நிறைவேற்றப்படாவிட்டால் அரசு தனது ''நன்னடத்தை'' அதிகாரத்தை இழந்து விடும் என நவீன சிங்கப்பூரின் அப்பாவான லீகுவான் யூ தெரிவித்தார்.

தண்டனை பெறவுள்ளவர் அமெரிக்கப் பிரஜை என்பதற்காக அத்தண்டனையை நிறைவேற்றாது விட முடியாது. அவ்வாறு செய்யின் அது எமது ஆட்சித் திறனை இழக்கச் செய்வதுடன் எதிர்காலத்தில் வேறொரு நாட்டுப் பிரஜையோ அன்றி எமது நாட்டுப் பிரஜையையோ தண்டிக்க முடியாது போய்விடும். அமெரிக்கர்கள் குற்றவாளிகளை நடத்துவது போல் நாம்நடத்துவதில்லை. இந்த விடயத்தில் நாம் பழைய நாகரிகத்தைப் பின்பற்றலாம் என்கிறார் அவர்.

இதைத் தொடர்ந்து இந்த பிரம்படித் தண்டனை சரியா, தப்பா?'' என்ற ஒரு புள்ளி விபரத்தை சேகரித்தது நியூஸ் வீக் பத்திரிகை!

புள்ளி விபர முடிவுகளில் எல்லோருக்கும் அதிர்ச்சி கலந்த ஆச்சரியம்! பிரம்படி சரிதான்! என முப்பத்தெட்டு விகிதமானோர் கருத்துச் சொல்லியிருக்கின்றனர்.

''இந்த மாதிரியான ஆதரவு பெருகுவது ஒரு அபாயமான அறிகுறி! உடல் ரீதியான சித்திரவதை செய்வதற்கு எங்கெல்லாம் அதிகாரம் உள்ளதோ, அங்கெல்லாம் அந்த அதிகாரம் தவறாகத்தான் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இது தான் சரித்திரம்'' என்று சிலர் கவலையோடு தலையில் கை வைக்கிறார்கள்.

சர்ச்சைக்குரிய நீதித்துறை அதிகாரிகளைக் கேட்டால் இந்த விவாதமே தேவையில்லாதது. அமெரிக்காவின் நீதி முறையா? எங்களின் நீதி முறையா? எது சிறந்ததென பார்க்க விரும்பின் அதற்கு ஒரு சின்ன புள்ளிவிபரம் போதுமானது. போன வருஷம் சிங்கப்பூரிலே மொத்தம் ஐம்பத்தெட்டு கொலைகளும் எண்பது பாலியல் வன்முறைகளும் நடந்துள்ளன. அதே வருஷம் அமெரிக்காவின்லாஸ் ஏஞ்சல்ஸில் மட்டும் ஆயிரத்து ஐம்பத்தெட்டு கொலைகளும் ஆயிரத்து எழுநூற்றி எண்பத்தொரு பாலியல் வன்முறைகளும் நடந்துள்ளன. இதற்குக் காரணம் என்ன தெரியுமா? நாங்கள் போன வருஷம் எங்கள் சட்டப்படி மூவாயிரத்து இருநூற்றுநாற்பத்துநாலு பேருக்கு இந்தப் பிரம்படித் தண்டனையைக் கொடுத்திருக்கிறோம் எனக் கூறி தமது நாட்டு தண்டனையை நியாயப்படுத்துகின்றனர் அவர்கள்.

இறுதியாக அமெரிக்காவைத் திருப்திப்படுத்துவதற்காக சிங்கப்பூர் அரசு தண்டனையை நான்கு பிரம்படியாகக் குறைத்து. மைக்கேல்வேக்கு தமது சிறையில் வைத்து தண்டனையை நிறைவேற்றியது. 13 கன அளவு மில்லிமீட்டர் நீளமுள்ள பிரம்பால் மைக்கேல்வேயின் புட்டத்தில் நான்கு தடவை அடிக்கப்பட்டது.

தண்டனை நிறைவேற்றப்பட்டபிறகு சிறை டாக்டர் அவரது உடலைப் பரிசோதித்துவிட்டு அவர் உடல் நிலை திருப்திகரமாக இருப்பதாகத் தெரிவித்தார்.

ஆயினும் இம்மாதம் இருபதாம் திகதிவரை சிறையில் இருக்க வேண்டும் என நீதிமன்றம் தீர்ப்பு கூறியுள்ளது.

மைக்கேல்வேக்கு பிரம்படியால் இரண்டு அங்குலத்துக்கு தசைகள் அள்ளப்பட்டு இருப்பதாகவும் இதனால் அவனால் உட்கார முடியவில்லை மிகுந்த சிரமத்துடன் தான் நடக்கிறான் என்கிறார் அவனது தந்தை.

அமெரிக்கா சிங்கப்பூருடன் எந்தவித உறவும் வைத்துக் கொள்ளக் கூடாது. மிகுந்த சாதகமான வர்த்தக நாடு என்ற அந்தஸ்திலிருந்து சிங்கப்பூரை நீக்க வேண்டும் என்று கோரி போராடப் போவதாக தந்தையான ஜார்ஜ்வே கூறுகிறார்.

இந்நிலையில் நவீன சிங்கப்பூரின் அப்பாவான லீகுவான் யூ ''தனிமனித உரிமைக்கு முக்கியத்துவம் தருவதாக நினைத்துக் கொண்டு சமூகக் கட்டுப்பாட்டையும் ஒழுங்கையும் குலைப்பதை அனுமதிக்க முடியாது'' என்ற தனது கொள்கையிலிருந்து வழுவாது நிற்கிறார்.

இத்தனை கொந்தளிப்புக்கும் மத்தியிலும் உலக நாடுகளையே பகைத்துக் கொள்ளும் அளவிற்கு எந்தக் கவலையுமின்றி பிரம்பை சுழற்றி நிற்கிறது சிங்கப்பூர்.


உ
சிவமயம்

# திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்!
நிகழும் மங்களகரமான பவ வருடம் ஆனித்திங்கள் 5ஆம் நாள் (யூன் மாதம் 19ஆம் திகதி 94) ஞாயிற்றுக்கிழமை பகல் 10.38 மணி முதல் 12.53 மணிவரையுள்ள சுவாதி நட்சத்திரமும் சித்த யோகமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்,

| | |
|---|---|
| எமது புத்திரன்<br>திருநிறைச் செல்வன்<br>**தயாளன் (தயா)**<br>அவர்கட்கு | எமது புத்திரி<br>திருநிறைச் செல்வி<br>**சுகன்யா**<br>அவர்களை |

திருவருள் துணை கொண்டு திருமணம் செய்ய பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.

Technikumstr 8. 8400 Winterthur SWITZERLAND.
இங்ஙனம் தங்கள் நல்வரவை அன்புடன் எதிர்பார்க்கும்

திரு. திருமதி சீவரத்தினம்
மீனாட்சியம்மன் கோவிலடி,
வல்வெட்டித்துறை.

திரு. திருமதி இரத்தினசிங்கம்
சிவன்கோவிலடி,
வல்வெட்டித்துறை.

மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள்.
★ இரு வீட்டார் அழைப்பிதழ் ★ (8573)



குழம்பாதீர்கள்! தளம்பாதீர்கள்!
வர்ணகுழம்பு வாணிபத்தில்
ஓர் மாற்றம்
**நியு ஸ்ரான்லீஸ்**
59/1, அர்ச்சுனா சாலை ( ஸ்ரான்லி வீதி ) யாழ்ப்பாணம்.
**க. நடராஜாவும் மைந்தர்களும்**
என மாற்றமடைந்துள்ளது.
டியுகோ, டியுலக்ஸ், பென்ரலைட் வர்ணகுழம்பு வகைகளுக்கு யாழ்நகரில் உத்தரவு பெற்ற வியாபாரிகள்
க. நடராசாவும் மைந்தர்களும்
59/1, அர்ச்சுனா சாலை
( ஸ்ரான்லி வீதி ) யாழ்ப்பாணம்- (சி-9643)



**கொழும்பு ஸ்ருடியோ**
தொழில் நுட்பத்தில்
35 வருட அனுபவம் வாய்ந்தவர்கள்
தரமான
★ Line, Half tone and Colour Blocks
★ றபர் சீல் Rubber Stamps
★ சில்க் ஸ்கிறீன் Silk Screen
★ Re-copy பழைய படங்களில் இருந்து புகைப்படங்களைப் பெரிதாக்க
எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்
குறைந்த செலவில் குறுகிய காலத்தில் தரமாகப் பெற்றுக்கொள்க.
கொழும்பு ஸ்ருடியோ
55, மணிக்கூட்டு வீதி, (சி-9571) யாழ்ப்பாணம்.



**நீர்ப்பாசன தொழில்நுட்பவியலாளர்கள் உடன் தேவை**

தாயக பொருண்மியத்தை வளர்க்கும் நோக்குடன் நாம் துரித நீர்வள மேம்பாட்டுத் திட்டத்தை அமுலாக்க உள்ளோம். இதை இனிது நிறைவேற்ற எமக்கு பின்வரும் அனுபவசாலிகள் உடன் வேண்டும்.

★ நீர்ப்பாசன பொறியியலாளர்கள்
★ நீர்ப்பாசன தொழில்நுட்பஉத்தியோகத்தர்கள்
★ நீர்ப்பாசன தொழில் மேற்பார்வையாளர்கள்
★ நீர்ப்பாசன படவரைஞர்கள்

தகைமையுடையவர்களுக்குத் தகுந்த சம்பளம் வழங்கப்படும். பெருநிலப்பரப்பில் வேலை செய்ய தெரிவு செய்யப்படுபவர்களுக்கு மேலதிக ஊக்குவிப்பு பணமும் கொடுக்கப்படும்.

உங்கள் அனுபவம் பற்றிய சான்றிதழ்களுடன்
இன்று வெள்ளி
17-6-94 காலை 10 மணிக்கு
கீழ் உள்ள விலாசத்தில் எம்முடன் தொடர்புகொள்ளவும்.

உட்கட்டுமானப் பகுதி,
தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்
இல. 10, செம்பியன் வீதி,
கொக்குவில்.
(சி-9649)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# ஜனாதிபதித் தேர்தலும் இனப் பிரச்சினையும்; சாத்தியமான தீர்வு என்ன?

சிறிலங்கா அரசிலமைப்பின் பிரகாரம் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படுவதானால்-நவம்பர் மாத முற்பகுதிக்குள் - இன்னும் சுமார் ஐந்து மாத காலப்பகுதிக்குள் அது நடத்தப்பட வேண்டும். ஆனால், இலங்கையில் இன்று எரியும் பிரச்சினையாகியுள்ள இனப்பிரச்சினை விவகாரம் தொடர்பாக இன்றும் முன்னேற்றகரமான அம்சங்கள் ஏதும் இடம்பெறாமை அரசாங்கம் தேர்தல் குறித்து எவ்வாறான திட்டத்தைக் கொண்டுள்ளது எனப் புரிந்துகொள்வதில் சிரமமாக உள்ளது.

ஆனால் ஒரு விடயம் மட்டும் தெளிவாகியுள்ளது. இனப்பிரச்சினைக்கு முழு அளவினதான தீர்வு ஒன்று காணப்படாதவரை விடுதலைப்புலிகள் இயக்கம் ஜனாதிபதித் தேர்தலை வடக்கு - கிழக்கில் அனுமதிக்கப் போவதில்லை என்பதே அதுவாகும். அதாவது இனப்பிரச்சினை விவகாரம் தேர்தலுக்காக விட்டுக் கொடுப்புக்கோ பேரம் பேசுதலுக்கோ உரிய தொன்றல்ல என்பதும், கடந்தகால அரசியற் தலைமை போன்று விடுதலைப்புலிகள் இயக்கம் ஏமாறுவதற்குத் தயாராக இல்லை என்பதே அதுவாகும்.

இந்நிலையில் ஜனாதிபதித்தேர்தலின் முன்னர் இனப்பிரச்சினை விவகாரத்தில் அரசாங்கம் தீர்க்கமான முடிவுகளை எடுக்கவேண்டிய நிர்ப்பந்தங்கள் சில இருக்கவே செய்கின்றன. இதற்கு அரசாங்கத்திடம் பொதுவாகவே உள்ள இரண்டு பிரதான வழிகள் ஒன்று விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரை விரைவில் நடத்துதல், அதாவது இராணுவத்தரப்பிலும், அரசதரப்பிலும் கூறப்படுவது போன்று 'இறுதிப்போரை' ஆரம்பித்தல் ஆகும். இரண்டாவது அரசியல் தீர்வு. அதாவது விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி இனப்பிரச்சினைக்கு ஓர் அரசியல் தீர்வை கொண்டு வருவதாகும்.

## இராணுவத் தீர்வு

இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வுதான் என்பதில் டி. பி. விஜேதுங்காஅசைக்க முடியாத நம்பிக்கையுடனேயே இன்றும் இருப்பதாகத் தெரிகின்றது. இதற்கேற்றவாறு ஆயத்தங்களையும் அவர் மேற்கொண்டும் உள்ளார் என்பதும் தெரிந்ததே.

இவரின் இம்முடிவின் பிரகாரமே சுமார் 70,000 துருப்புக்கள் வட பகுதியில் குவிக்கப்பட்டு இறுதித்தாக்குதலுக்குத் தயார் படுத்தப்பட்டும் உள்ளன.

ஆயினும் இறுதித்தாக்குதலுக்கு உத்தரவு இடுவதற்கு டி.பி. விஜேதுங்கா தற்பொழுது சற்றுத்தயக்கம் காட்டுவதாகத் தெரிகின்றது. இதற்குத் காரணங்களும் இல்லாமல் இல்லை. இதில் முக்கியமானது, இவ் யுத்தத்தில் பெரும் இழப்புக்கள் இன்றி குறுகிய காலத்தில் வெற்றி பெற முடியுமா என்பதில் உள்ள சந்தேகமே.

ஏனெனில் தேர்தல் நெருங்கி வரும் வேளையில் மேற்கொள்ளப்படும் இராணுவ நடவடிக்கைகள் எதிர்பார்த்த வெற்றியைக் கொடுக்காது போனால், அரசாங்கம் பெரும் நெருக்கடிக்கு உள்ளாக வேண்டிவரும். ஒப்பரேசன் யாழ்தேவி நடவடிக்கையின் போது இராணுவத்திற்குக் கிடைத்த இழப்பு போன்றதொரு இழப்பு தற்போது அனுமதி அளிக்கப்படும் தாக்குதலிலும் ஏற்படுமானால் அதில் இருந்து அரசாங்கத்தால் மீளவே முடியாது போகலாம் அதுவே தேர்தல் தோல்வியின் அத்திவாரமும் ஆகலாம்.

அதேசமயம், அவ்வாறான இழப்பு ஏற்படாது என்றும் எதிர்பார்க்க முடியாது. ஏனெனில் ஒப்பரேசன் யாழ்தேவியின் போது இருந்ததை விட விடுதலைப்புலிகள் அமைப்பு பூநகரியில் பெற்ற ஆயுதங்களுடன் இன்று பலமான தொரு நிலையிலேயே உள்ளது என்பது இராணுவ ஆய்வாளர்களின கணிப்பீடாகும்.

அத்தோடு ஒரு சில மாத யுத்தத்தினால் விடுதலைப்புலிகளிடம் இருந்து ஒரு பிரதேசத்தை மீட்டெடுத்து தேர்தல் நடத்துவதற்குரிய சூழ்நிலையையும் ஏற்படுத்தி விட முடியாது. யாழ்ப்பாண நகரை இந்திய இராணுவம் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர எடுத்த காலப்பகுதியே இதற்கு போதிய உதாரணமாக இருக்கக் கூடியதாகும்.

இதேசமயம், பாரிய தாக்குதல் ஒன்று மேற்கொள்ளப்படும் பட்சத்தில் பெருமளவில் பொதுமக்கள் கொல்லப்படுவதற்கான வாய்ப்புக்களும் அதிகமாகவே உள்ளன. இந்நிலையில் ஏற்கனவே சிறுபான்மை மக்களுக்கு எதிரான போக்குடையவர் என்ற பெயரைப் பெற்றுவிட்ட டி. பி விஜேதுங்காவினால் சிறுபான்மையினரின் வாக்குகளைப் பெற்றுக் கொள்வதில் மேலும்சிரமங்கள் உருவாகலாம்.

இவற்றிற்கும் மேலாக இன்று வடக்கில் ஒரு பெரும் யுத்தம் ஒன்றை நடத்துவதானால் பெரும் நிதி ஒதுக்கீடு ஒன்றை திறைசேரி பாதுகாப்பு அமைச்சிற்கு செய்ய வேண்டி வரும். ஏற்கனவே நிதி நெருக்கடியால் திணறிக் கொண்டிருக்கும் திறைசேரியால் போருக்கான பெரும் நிதி ஒதுக்குவது அத்துணை சுலபமானதாக இருக்கப் போவதில்லை.

ஏனெனில் தேர்தலை முன்னிட்டு அரசாங்கம் தொடர்ச்சியாகப் பல நலத்திட்ட அறிவிப்புக்களையும், வேலை வாய்ப்புக்களையும் அறிவித்து வருகின்றது. இவற்றிற்கு திறைசேரி பெரும் நிதி ஒதுக்கீடுகளைச் செய்ய வேண்டியுள்ளது. இதேசமயம், அரசாங்கம் அறிவிக்கும் சலுகை அறிவிப்புக்கள் திறைசேரியின் வருமானத்தில் பெரும் வீழ்ச்சிகளையும் ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் ஒரேநேரத்தில் அரசாங்கத்தின் போர் செலவீட்டிற்கும, வேலைவாய்ப்பு சலுகை அறிவிப்புக்களுக்கும் திறைசேரியால்நிதி ஒதுக்கீடு செய்ய முடியாது. ஒன்று யுத்தச்செலவீட்டைச் செய்ய வேண்டும் அல்லது தேர்தல் சலுகை அறிவிப்புக்களை நிறைவேற்ற வேண்டும். இந்நிலையில், அரசாங்கத்தின் பார்வையில் யுத்தத்தைவிட வேலைவாய்ப்பு அறிவிப்புக்களினாலும், சலுகை அறிவிப்புக்களினாலேயே அதிக வாக்குகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என கருதப்படுகின்றது. அதாவது யுத்தத்தின் மூலம் ஒரு விஷப்பரீட்சையை அரசாங்கம் செய்வதற்குரிய காலப் பகுதியாக இது இல்லை என்றே அரசியல் அவதானிகள் கருதுகின்றனர். இதனை மீறி டி. பி. விஜேதுங்கா இராணுவ நடவடிக்கைக்கு உத்தரவு இடுவாரேயானால் அது அவரின் தவறான இராணுவ அரசியல் மதிப்பீடாகவே இருக்கும்.

## அரசியல் தீர்வு

இதேசமயம் அரசியற் தீர்வு என்பதும் அவ்வளவு சுலபமானதாகவும், கிட்டத்தில் நெருங்கக் கூடியதாகவும் இருப்பதாகத் தெரியவில்லை. விடுதலைப் புலிகளைப் பொறுத்து அரசியல்தீர்வு குறித்து அவர்கள் தமது நிலைப்பாட்டில் தெளிவாகவே உள்ளனர். வடக்கு-கிழக்கு தமிழர் தாயகம் என்பது அங்கீகரிக்கப்படுவதன் அடிப்படையிலேயே அரசியல் தீர்வு எது பற்றியும் பேச முடியும் என்பது அவர்களின் நிலைப்பாடாகும்.

ஆனால் டி.பி. விஜேதுங்காவோ இனப்பிரச்சினை தொடர்பாக இன்னமும், விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு நிபந்தனைகள் விதித்து வருகின்றார். ஆனால், இந்நிபந்தனைகளை ஏற்று விடுதலைப் புலிகள் பேச்சுக்கு வரப்போவதில்லை என்பதை அவர்கள் ஏற்கனவே தெளிவுபடுத்திவிட்டனர்.

இந்நிலையில் குறுகிய சிலமாதங்களே உள்ள காலப்பகுதியில் ஒரு நீண்டகாலப் பிரச்சினையைப் பேச்சுவார்த்தை அடிப்படையிலான அரசியற்தீர்வு ஒன்றின் மூலம் தீர்க்க முடியுமா என்பது சந்தேகமே. ஜனாதிபதித் தேர்தல் வரையுள்ள காலப் பகுதியை நோக்கினால், பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கான சூழ்நிலையை உருவாக்கவோ அன்றி ஆரம்ப பேச்சுக்களை நடத்துவதற்கான ஆரம்ப முயற்சிகளைத் தொடங்கவோ கூட இவ் இடைக்காலம் போதுமானவையாக இல்லை என்றே கூறமுடியும்.

அவ்வாறு இல்லாது, அரசாங்கம் தனது கொள்கையை முழுமையாக மாற்றி தமிழ் மக்களின் தாயகத்தையும் அங்கீகரித்து, அங்கு தமிழ் மக்களின் நிர்வாகத்தையும் அங்கீகரித்து நடவடிக்கைகளிலும் இறங்குமானால் அது இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வாக அமையலாம். ஆனால் இது ஒரு கற்பனையாகவே இருக்க முடியும் இது யதார்த்தமானால் ஐ. தே.கவிற்கு அது தற்கொலைக்கு ஒப்பானதாகவே இருக்கும். இதுவரை டி.பி விஜேதுங்கா ஊட்டி வளர்க்க முற்பட்ட சிங்களப் பேரினவாதமேஅவரை விழுங்கிவிடக்கூடும்.

இந்நிலையில், தேர்தலின் முன் இனப்பிரச்சினைக்கு அரசியற் தீர்வு என்பது எட்ட முடியாத ஒன்றாகவே இருக்கும் என்பதில் அரசியல் அவதானிகளிடத்தில் முரண்பாடு இருப்பதாக இல்லை இக்கணிப்பீட்டை மீறி ஒரு அரசியல் தீர்வு ஏற்படுமானால், உலகிலேயே மிகவிரைவில் தீர்க்கப்பட்ட இனப்பிரச்சினையாகவே இது இருக்கும்.

இந்நிலையில், இனப்பிரச்சினை விவகாரத்தில், இராணுவத் தீர்வுஅரசியற் தீர்வு ஆகிய இரண்டும் இக்குறுகிய காலப்பகுதியில் சாத்தியமாவதற்கான வாய்ப்புகள் மிக அரிதாகவே உள்ளன. அவ்வாறு சாத்தியமாக்க ஐ. தே. க முனையுமானால் ஏதோ ஒரு வகையில் அது ஐ. தே. க. வின் தேர்தல் அனுகூலங்களைப் பாதிக்கக்கூடியனவாகவே அமையும்.

## அரசின் புதியவழி என்ன?

இதன் காரணமாக ஜனாதிபதி தேர்தலை நடத்துவதானால் திட்டவட்டமாக அரசாங்கம் புதிய வழி ஒன்றையே நாடவேண்டி வரும். இது குறித்து தெளிவான கருத்துக்களை தற்பொழுது முன்வைக்க முடியாது. ஆயினும் அரசிற்குரிய வாய்ப்புக்கள், சந்தர்ப்பங்கள் குறித்தே ஓரளவு பரிசீலிக்க முடியும்.

இதில் முக்கியமாகச் சுட்டிக் காட்டப்பட வேண்டியுள்ளது ஜனாதிபதித் தேர்தல் குறித்துப் பேசிவரும் அரசாங்கம் வடக்கு - கிழக்கில் எவ்வாறு தேர்தல் நடத்துவது என்பது பற்றிப் பேசாமையாகும். இது அரசாங்கத்தின் கண்களில்இருந்துஒழிந்து விடக்கூடிய சிறிய விடயமும் அல்ல. இந்நிலையில் அரசாங்கம் இது குறித்து ஏதோ ஒரு திட்டத்தைக் கொண்டிருக்க வேண்டும். அதாவது தேர்தல் விதிகளுக்கு முரண்பாடான நடவடிக்கையில் ஈடுபடவோ அன்றி அரசியல் யாப்பிற்கு விரோதமாகச் செயற்படவோ தயர்ராக இருத்தல் வேண்டும்.

சிறிலங்காவின் கடந்த காலத் தேர்தல்கள் அவ்வாறு இடம்பெற்றதற்கான ஆதாரங்களும் உண்டு. எடுத்துக்காட்டாக 1988 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலையே குறிப்பிடலாம். அரசியல் வன்முறைகளும், படுகொலைகளும் உச்சமாக இருந்த போது தேர்தலுக்கு இது உகந்த சூழ்நிலை இல்லை எனப் பலர் கூறிய போதும் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றது.

பல இடங்களில் வாக்களிப்புக்கள் இடம்பெறவில்லை. அதற்கும்மேலாக பல இடங்களுக்கு வாக்களிப்புப் பெட்டிகளோ, அன்றித்தேர்தல் அலுவலர்களோ செல்லவும் இல்லை. பல இடங்களில் அரச படையினாலும் குண்டர்களினாலும் வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன. வாக்காளர் வாக்களிக்க வர முடியாத அளவிற்கு வன்முறைகள் இடம்பெற்றன. இவ்வாறான சம்பவங்களுக்கு எல்லாம் சிறந்த உதாரணமாக மொனராகலை மாவட்டம் இருந்தது.

மொத்த வாக்காளர்களில் மிகவும் குறைந்த வீதத்தினரான வாக்காளரே மொனராகலை மாவட்டத்தில் வாக்களித்தனர். இருப்பினும் தேர்தல் செல்லுபடியானதாகவே ஏற்றுக் கொள்ளப்பட்டது. இத் தேர்தலுக்கு எதிராக எதிர்க்கட்சியினால் தாக்கல் செய்யப்பட்ட ஜனாதிபதி தேர்தல் ஆட்சேபனை வழக்கும் உயர்நீதி மன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டதோடு, இவ் வழக்குச் செலவாக 16 லட்சம் ரூபா செலுத்துமாறும் தீர்ப்பளிக்கப்பட்டது.

இந் நிலையில், தற்பொழுது ஜனாதிபதி தேர்தலை நடத்துவதில் எதுவித சிக்கலும் இருப்பதாக வெளிக்காட்டாமல் அரசாங்கம் இருப்பது ஏதாவது குறுக்கு வழிகள் குறித்து அரசு முடிவு செய்துள்ளதாஎன எண்ண வைப்பதில் தவறில்லை.

அவ்வாறானதொரு குறுக்குவழியாக, வடக்கிலும், கிழக்கிலும் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிற்குள் உள்ள பகுதிகளில் மட்டும் தேர்தலை நடத்திவிட்டு வடக்கு - கிழக்கில் தேர்தல் நடந்ததாக அறிவிப்புச் செய்யினும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஏனெனில், மக்கள் எத்தனைசதவீதம் வாக்களிக்கவேண்டும் என்றோ, எத்தனை தேர்தல் வாக்குச்சாவடிகள் வைக்கவேண்டும்என்றோஅரசியல்சட்டத்தில் கூறப்படவில்லை. அவ்வாறாயினும்கூடவடமாகாணத்தில்கிளிநொச்சி,முல்லை மாவட்டங்களில்தேர்தல் வாக்குப்பெட்டிகள் வைப்பதற்கு இராணுவ முகாம்களைத்தவிர வேறு வழியில்லை.

மேலே குறிப்பிட்டது அரசாங்கம் தேர்தல் நடத்துவதற்காகத் தேடும் குறுக்கு வழிகளில் ஒன்றாக அமையக் கூடும் என்பதே ஒழிய இதுவே அரசாங்கம் தேர்ந்தெடுக்கும் வழி என்று அறுதியிட்டுக் கூறிவிட முடியாது.

ஆனால் அரசாங்கம் குறுக்குவழியைத் தவிர வேறு வழிகளை நம்பியிருக்க முடியாது என்பதே இங்குள்ள முக்கிய விடயமாகும். ஏனெனில் அரசாங்கம் வடக்கு-கிழக்கில் சமாதானத்தையோ அன்றித் தேர்தல் நடத்தும் சூழ்நிலையையோகொண்டு வராமல், தேர்தல் ஒன்றை நடத்துவதானால், அதற்கு அடுத்தவழியாக இருப்பது அரசியல் அமைப்பில் மாற்றத்தைச் செய்வதாகும். இது இரண்டு வழிகளில் மேற்கொள்ளப்படவாய்ப்புகள் உண்டு.ஒன்றுவடக்கு-கிழக்கு மாகாணங்களில் தேர்தல் இன்றி ஜனாதிபதியைத் தேர்ந்தெடுப்பதற்கான திருத்தச்சட்டமூலத்தைக்கொண்டுவருதல், இரண்டாவது முற்றுமுழுதாகவே அரசியல் அமைப்பு முறையை மாற்றி ஜனாதிபதி முறையில் இருந்து பாராளுமன்ற அமைப்பு முறைக்குமாறுதல்.

ஜெயராஜ்

இதில் முக்கியமான அம்சம் இவ்விரண்டு மாற்றத்திற்கும் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை தேவை எனபது. ஆகையினால் இதில் எதிர்க்கட்சிகள் எந்தளவிற்கு ஒத்துழைப்பு வழங்கும் என்பது கேள்விக்குரியதாகும்.

எதிர்க்கட்சியைப் பொறுத்து ஜனாதிபதி முறை ஒழிக்கப்பட வேண்டும் என்பது முக்கிய விடயமாக இருப்பினும் அது தங்களால் ஒழிக்கப்பட வேண்டுமே ஒழிய உருவாக்கிய ஐ. தே. கவே ஒழிப்பதற்கு அவர்கள் சம்மதம் தெரிவிப்பார்கள் என்று எதிர்பார்ப்பதற்கில்லை. அடுத்ததாக, வடக்கு - கிழக்கு தவிர்ந்த பகுதியில் இருந்து ஜனாதிபதி தேர்ந்தெடுக்கும் வகையில் மாற்றம் செய்யப்படுவதென்பது தமிழர் தாயகத்திற்கும் சிறி

(11ஆம் பக்கம் பார்க்க)

# யாழ். மாவட்ட கூட்டுறவுச் சங்கங்கள் செயலகத்திற்கிடையில் ஒரு பனிப்போர்

இந்தப் போராட்ட காலத்தில் கூட்டுறவு சங்கங்களின் பணி முக்கியம் வாய்ந்தது: மக்களுக்குத் தேவையான அத்தியாவசிய பொருள்களை விநியோகிப்பதோடுமக்களுக்கான அடிப்படைப் பொருள்தேவைகளை பூர்த்தி செய்யும் தேவையும் சங்கங்களுக்கு உண்டு.

நீண்ட காலமாக யாழ். மாவட்ட கூட்டுறவுச் சங்கங்கா மக்களுக்கான அடிப்படை பொருள் தேவையை தாராளமாகப் பூர்த்தி செய்யும் விடயத்தில் முழுமையான பங்களிப்புச் செய்கின்றன என்று சொல்வதற்கில்லை.

1990 ஜூன் மாதத்தின் பின்னர் இப்பகுதியில் ஏற்பட்ட யுத்த நிலைமை அடுத்து சிறிலங்கா அரசாங்கத்தின் பொருளாதாரத்தடை நடவடிக்கையாலும் சிலபொருள்கள் விடயத்தில் கட்டுப்பாட்டை அரசு கைக்கொள்வதனாலும் அத்தியாவசியப் பொருள்கா பல மக்களைச் சீராகச் சென்றடைவதில்லை.

இந்தக் காலகட்டத்திலே தான்கூட்டுறவுச் சங்கங்களின் பணி பெரிதாகத் தேவைப்படுகின்றது.

> "வேறு வியாபார நிலையங்களை விட அதிகமாகக்கூட்டுறவுச் சங்கங்களையே அதீத நம்பிக்கையுடன் மக்கள் நாடிய காலமும் உண்டு. ஆனால், இன்று அந்த நிலையில்லை"

சிறிலங்கா அரசாங்கத்தை பொறுத்தவரையில் தமிழ் மக்களை பட்டினி போட்டு நசுக்குவதன் மூலம் அவர்கள் மத்தியிலிருந்து எழும் எழுச்சி உணர்வுகளை மழுங்கடிக்கலாம் எனத்திட்டமிட்டுள்ளது.

ஆனால், இந்தப் போராட்ட காலத்தில் மக்களின் தேவையை உணர்ந்து முடிந்த அளவில் தம்மாலான சேவையை சங்கங்கள் செய்யமுடியும்.

மக்களுக்கு கூட்டுறவுச் சங்கம் மீதான நெருக்கம் மிக நீண்டகாலமாக உள்ளது. மக்களுக்காக மக்களால் உருவாக்கப்பட்டவை கூட்டுறவுச் சங்கங்கள்.

நியாயமான விலையில் தரமான பொருள்களை தாராளமாக விநியோகம் செய்யும் நிலை கூட்டுறவுச்சங்கத்திற்கு கடந்த காலத்திலிருந்து வந்தது. வேறு வியாபார நிலையங்களை விட அதிகமாகக் கூட்டுறவுச் சங்கங்களையே அதீத நம்பிக்கையுடன் மக்கள் நாடிய காலமும் உண்டு. ஆனால் இன்று அந்தநிலையில்லை.

இன்று அத்தியாவசிய உணவுப்பொருள்களை விருப்புடன் நாடி சங்கங்களில் பெறும் சிந்தனை மக்கள் மனங்களில் இல்லாதொழிந்துவிட்டது எனக்கூறலாம்.

இந்த நிலைக்கு சங்கங்களின் பொருள் கொள்வனவு, விநியோக விடயத்தில் பல்வேறு சிக்கல்கள் உள்ளன என்பதை மறுக்க முடியாது.

தற்போது கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாக விடயத்திலும் மக்களுக்கான பொருள் விநியோக சேவை விடயத்திலும் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதியினருக்குமிடையே ஒரு பனிப்போர் நிகழ்ந்து வருகின்றது.

இது சமீபகாலத்தில் வெளிப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த நான்கு வருடகாலமாக யாழ். மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் பிரச்சினைகள் யாழ். அரசாங்க அதிபரினால் தீர்த்து வைக்கப்படவில்லை என்று யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை குற்றம் சாட்டியுள்ளது.

அது அரசாங்க அதிபருக்கு அனுப்பிவைத்துள்ள பட்டியலில் ஏகப்பட்ட பிரச்சினைகள் குறிப்பிடப்பட்டுள்ளன. இதில் எதையும் அரச அதிபர் தீர்க்க முன்வரவில்லை என்றும் மேற்படி சபை சுட்டிக் காட்டியுள்ளது.

கடந்த பெப்ரவரி மாகம் 2 ஆம் திகதி இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர், கூட்டுறவுச்சபை சில தீர்மானங்கள் அடங்கிய பட்டியலை அரச அதிபரிடம் கையளித்தது.

இதற்கு யாழ். அரச அதிபரினால் அனுப்பி வைக்கப்பட்ட பதில் முரண்பாடானதாக உளளது என கூட்டுறவுச் சபை தெரிவித்திருந்தது. இதன் பின்னர் யாழ். அரச அதிபருக்கு மீண்டும் சில முக்கிய கோரிக்கைகளை வலியுறுத்தி பதில் அனுப்பி வைக்கப்பட்டது.

அக்கோரிக்கைகள் வருமாறு:

★ பிரதேசச் செயலரின் அனுமதியுடன் இரு வாரக் கடன் வழங்கல்,

★ மண்ணெண்ணெய்க்கான போக்குவரத்துக் கூலி 93 செப்ரெம்பர் மாதத்திலிருந்து வழங்குவது எனத்தீர்மானித்து அறிக்கையில் 94 மாசியில் இருந்து வழங்குவது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

★ யாழ். மாவட்டத்திற்கு தேவையான அத்தியாவசிய உணவுப் பொருட்களின் கையிருப்பும், விநியோகத்தில் சீரான நடைமுறை பின்பற்றப்படாமையும்.

★ வர்த்தகத்திணைக்களத்திற்கு வியாபார நடவடிக்கைகளுக்கு ஊக்கமளித்துபல நோக்குக் கூட்டுறவுச்சங்கங்களை புறக்கணித்தமை;

★ இடம்பெயர்ந்த கூட்டுறவுச்சங்கங்களின் கோரிக்கைகள் புறக்கணிக்கப்பட்டமை.

இவற்றிற்கான உத்தியோக பூர்வமான பதில்கள் எவையும் யாழ். அரச அதிபரினாலோ அல்லது செயலக புனர்வாழ்வுப்பகுதியினராலோ அனுப்பி வைக்கப்படவில்லை.

ஆயினும் இவற்றிற்கான பதில்களாக சில கருத்துக்கள் புனர்வாழ்வுப் பகுதி அதிகாரிகளினால் வெளியிடப்பட்டுள்ளன.

யாழ். மாவட்டத்தில் செயல்படும் 22 கூட்டுறவுச்சங்கங்களில் ஒன்றைத்தவிர மற்றைய 21 சங்கங்களும் பெருந்தொகைப்பணம் மீளச்செலுத்த வேண்டியுள்ளது. இந்த நிலையில் திரும்பத்திரும்ப கடனடிப்படையில் பொருள்கள் வழங்க முடியாது என்ற கருத்து சமீபத்தில் புனர்வாழ்வுப் பகுதியினரிடமிருந்து வெளிப்பட்டுள்ளது.

வர்த்தகத்திணைக்களங்கள் போன்று கூட்டுறவுச்சங்கங்கள் சுயமாக இயங்க வேண்டும். வர்த்தகத் திணைக்களங்களில் உணவுப் பொருள்கள் தாராளமாக அதே நேரம் மலிவாக பெற முடியும் என்ற கருத்தை புனர்வாழ்வுப் பகுதியினர் வெளியிட்டுள்ளனர்.

இந்த மாவட்ட மக்களின் உணவுத்தேவையை பூர்த்தி செய்கின்ற பொறுப்பு செயலகத்தைபோல நம். செயலகம் முயற்சி செய்து கப்பல் கட்டணம் இல்லாமல் சங்கங்களுக்கு பொருள்களை எடுத்து வர முயற்சி செய்ய வேண்டும் என்ற கோரிக்கை கூட்டுறவுச் சங்கத் தரப்பினரால் முன் வைக்கப்படுகின்றது.

புனர்வாழ்வுப் பகுதியினருக்கு எடுத்து வரப்படும் பொருள்களுக்கு கப்பல் கட்டணம் அறவிடப்படுவதில்லை. இதனாலேயே புனர்வாழ்வுப்பகுதியினரை பொருள் கொள்வனவிற்காக கோரி நிற்கிறோம் என்ற கோரிக்கையும் சங்க நிர்வாகிகளினால் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறாக புனர்வாழ்வுப் பகுதியினருக்கும் கூட்டுறவுச் சங்கங்களுக்குமிடையேயான பனிப்போர் தீவிரமடைந்து வருகிறது. இரு குழுவினருக்கிடையான இழுபறியில் பொது மக்கள் சிக்கி தவிக்கின்றனர்.

மக்களின் அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். அவர்களின் கஷ்டங்கள் விரட்டியடிக்கப்பட வேண்டும் என்று இரு குழுவினரும் உளப்பூர்வமாகச் சிந்தித்து ஐக்கியப்பட்டு பணி செய்வதாகத் தெரியவில்லை.

சங்கங்கள் ஊடாக பங்கீட்டிற்கு விநியோகம் செய்யப்படும் சீனி ஒரு குடும்பத்தின் ஒரு வாரத் தேவையைப் பூர்த்தி செய்யப் போதுமானதாக இல்லை. இதே மாதிரியானது தான் மண்ணெண்ணெயின் விநியோகமும்.

புனர்வாழ்வுப் பகுதியினர் வழங்குவதைத்தான் நாம் பங்கீட்டு விநியோகம் செய்கின்றோம் என சங்க நிர்வாகிகள் குற்றம் சாட்டுகின்றனர். சங்கங்கள் நேரடியாகவே கொழும்பில் கொள்முதல் செய்து தனியாக கப்பலில் இப்பொருள்களை, தாராளமாக எடுத்து வரலாமே என்ற கேள்விக்கு நிதி நெருக்கடியையும், கப்பல் கட்டணத்தையும் சங்க நிர்வாகம் சுட்டிக் காட்டுகிறது.

விநியோகச் சீரின்மையும், பொருள் தரமின்மையு சங்கங்களில் மலிந்துள்ளன.

கூட்டுறவுச் சங்கங்கள் மீதான நம்பிக்கை மக்கள் மனங்களில் மெல்ல நலிந்து வருகிறது. இது எந்த விதத்தில் எப்போது சீர் செய்யப்படப் போகிறது என்பது கேள்விக்குரியதே.

**எஸ். பி. எஸ்.**

---

## வியாழன்

தொலை நோக்கி மூலம் இந்த வால் நட்சத்திரம் முதன் முதலில் அவதானிக்கப்பட்டதால் இதற்கு ''ஷூ மேக்கர் லெவி''என பெயரிடப்பட்டுள்ளது.

10 ஆண்டுகளுக்கு முன்னர் வியாழனிலிருந்து 50 மில்லியன் கிலோ மீற்றர் தூரத்தில் சுற்றிக் கொண்டிருந்த 'ஷூ மேக்கர்-லெவி-வால்' நட்சத்திரம் படிப்படியாக வியாழனின் ஈர்ப்புச் சக்திக்கு உட்பட்டு வியாழனில் இருந்து 25 ஆயிரம் கிலோ மீட்டர் தூரத்தில் சுற்றத் தொடங்கியுள்ளது. இது மிக விரைவில் (அதாவது எதிர் வரும் ஜூலை16ம்முதல் 22ம் திகதி வரையான காலப்பகுதியில்) வியாழனின் ஈர்ப்புக்கு உட்பட்டுமோதிச் சிதற உள்ளது.

ஒரே பகுதியாக இருந்த இந்த வால் நட்சத்திரம் 21 துண்டுகளாக உடைந்து வியாழன் மீது மோதிச் சிதறும் எனக் கணிப்பிடப்பட்டுள்ளது. இவை இக் காலப் பகுதியில் ஒவ்வொன்றும் 1 கிலோ மீற்றரிலிருந்து 4 கிலோ மீற்றர் வரையான குறுக்களவு கொண்ட துண்டுகளாக செக்கனுக்கு 60 கிலோ மீற்றர் வேகத்தில் ஒன்றன் பின் ஒன்றாக வியாழனுடன் மோத உள்ளன.

இம் மோதலின் போது ஐதரசன் குண்டுகள் வெடித்தது போன்ற சத்தம் கேட்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஐதரசன், ஹீலியம் ஆகிய வாயுக்களைப் பெரும்பான்மையாக கொண்ட வியாழன் கிரகத்துடன் இம் மோதல் இடம் பெறுவதே இதற்குக் காரணம். வியாழனிலிருந்து 240 கிலோ மீற்றர் உயரத்திற்கு பெரிய தீப்பிழம்பு உருவாகும். ஐதரசன் வாயு இம் மோதலால் மாற்றம் அடைந்து அணுவெடிப்பு ஏற்படும். இதனால் தீப்பிழம்புகள் பெருமளவில் உருவாகும். வியாழனில் 300 கிலோ மீற்றர் ஆழத்திற்கு பள்ளங்கள் ஏற்படும். 2 கோடி மெகா தொன் நிறையுள்ள ரி. என். ரி. வெடிப்பொருள் வெடிக்கும்போதுள்ள விளைவு ஏற்படும். இதனால் வியாழக் கிரகம் கிடுகிடுத்து ஆடும். மூவாயிரம் கிலோ மீற்றர் தூரம் புகைமண்டலம் எழும் என எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாறான ஒரு நிகழ்வு பூமியை எதுவிதத்திலும் பாதிக்காது என விஞ்ஞானிகள் கூறுகின்றனர். எனினும் இவ்வாறான மோதல் பூமியில் நிகழுமானால் அது எவ்வாறான பாதிப்பை ஏற்படுத்தும் என்பதை அறிந்து கொள்ள வியாழன் -ஷூ மேக்கர் - லெவி மோதல் வழி செய்யும் என விஞ்ஞானிகள்நம்புகின்றனர்.

---


அகில இலங்கை
பரஸ்பர சகாயநிதிச்சங்கம்
வரைவுள்ளது
தபாற்கந்தோரடி, வட்டுக்கோட்டை.

## பதவி வெற்றிடம்

### அலுவலக ஏவலாளர்

மேற்காண் பதவிக்கு வலிமேற்கு பிரிவில் வசிப்பவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**சம்பளத்திட்டம்:**

$$\frac{1040 - 1740}{5 \times 20 - 5 \times 30 - 5 \times 40 - 5 \times 50}$$

(மற்றும் சங்கத்தால் அனுமதிக்கப்பட்ட படிகளும் வழங்கப்படும்)

**வயதெல்லை:**

30-06-1994 அன்று 40 வயதிற்கு மேற்படாமல் இருக்கவேண்டும்

**தகைமைகள்:**

குறைந்தபட்சம் எட்டாம் வகுப்பு சித்தியெய்தி இருத்தல் வேண்டும்.

**விண்ணப்ப முடிவு திகதி: 30-06-1994**

விண்ணப்பங்கள் யாவும் சொந்தமாகத் தயாரிக்கப்பட்டு பொதுமுகாமையாளர், அகில இலங்கை பரஸ்பர சகாயநிதிச் சங்கம் வரைவுள்ளது, தபாற்கந்தோரடி, வட்டுக்கோட்டை என்ற முகவரிக்கு பதிவுத் தபால்மூலம் அனுப்பி வைக்கவேண்டும் விண்ணப்பங்களுடன் தகைமைச் சான்றிதழ், பிறப்புச்சான்றிதழ், வதிவிடச் சான்றிதழின் புகைப்படப் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும். முடிவுத்திகதிக்குப் பின் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். சங்க நடைமுறைக்கேற்ப ரொக்கப்பிணை செலுத்தவேண்டும்.

(சி-9813) - பொதுமுகாமையாளர்

யாழ்ப்பாணம் நல்லூர் கிளை நூலகம்.

# கப்டன் சுமந்திரனுக்கு இன்றுநினைவுக்கல்நாட்டல்

திருமலை குச்சவெளி காட்டுப் பகுதியில் கடந்த 10 ஆம் திகதி சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட எதிர்பாராத மோதலின் போது வீரச்சாவை தழுவிக் கொண்ட கப்டன் சுமந்திரன் (சந்திரன் தயாபரன் திருமலை) என்பவரது திருவுருவப்படம் இன்றுபிற்பகல் 3.00 மணிக்கு அவரது தற்போதைய இல்லத்திலிருந்து அணிவகுப்பு மரியாதையுடன் எடுத்துச் செல்லப்பட்டு பளை இத்தாவில் அ. த. க பாடசாலையில் மக்கள் அஞ்சலிக்கு வைக்கப்பட்டு பின்னர் அங்கிருந்து கொடிகாமம் மாவீரர் துயிலுமில்லத்தித்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு இறுதி இராணுவ மரியாதைகளுடன் நினைவுக்கல் நாட்டப்பட உள்ளது.

# இரவில் செஞ்சிலுவை கொடி இறக்கப்படுவதால் பீதி

(வடமராட்சி)

பருத்தித்துறை இறங்குதுறையில் கட்டப்பட்டிருக்கும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரின் கொடி தினமும் காலையில் கட்டப்பட்டு மாலையில் இறக்கப்பட்டு வருகின்றது.

பொருள்களை இறக்குவதற்கு கப்பல் வரும் போது கொடி கட்டப்படுகிறது. கப்பல் மாலை காங்கேசன் துறைக்கு புறப்பட்டதும் இக்கொடி இறக்கப்படுகின்றது.

அதே வேளை இறுதியாக கப்பலில் இருந்து இழுவைப் படகில் இறக்கும் பொருள்கள் கரைக்கு வந்து பொருள்கள் அப்புறப்படுத்த முன்னரே கொடி இறக்கப்பட்டு விடுவதினால் தொழிலாளர்கள் மத்தியில் சஞ்சலம் ஏற்பட்டுள்ளது. இந்த இடைப்பட்ட நேரத்தில் தொழிலாளர்கள் பாதுகாப்பற்ற நிலையில் காணப்படுகின்றனர்.

மற்றும் இங்குள்ள களஞ்சியம் ஒன்றில் பொருள்கள் வைக்கப்பட்டுள்ளன. இதற்குக் கூட ஒரு பாதுகாப்பான சூழல் காணப்படாததால் ஊழியர்கள் பீதியடைந்துள்ளனர். (யோ)

### அரச

ஒன்பது கோடியே அறுபது லட்சம் ரூபாவை மேலதிகமாக செலவிடவேண்டி ஏற்படும். இத்திட்டத்தின்படி அரசாங்க சேவையிலுள்ள நான்கு அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பமொன்றுக்கு வைத்திய செலவினங்களுக்காக 22 ஆயிரம் ரூபாவை பெற்றுக்கொள்ள முடியும். விசேட சிகிச்சை தேவைப்படும்போது மேலதிகமாக பதினையாயிரம் ரூபாவை பெற்றுக்கொள்ளலாம் எனக் கூறப்படுகிறது.

### பனிப்போர்

பிரிட்டிஷ் அரசின் இயல்பூக்கமான இரகசிய உலகில் ஆவ்வாறு காணப்படுகிறது.

பிரிட்டனின் பிரதான வெளிநாட்டு உளவு சேவையான எம்-16 தலைவராக கொலின் மக்கோல் பிரபுவுக்கு பதிலாக டேவிட் ஸ்பெடிங்கை நியமிப்பதாக மார்ச் மாதம் அரசாங்கம் அறிவித்தது. அதாவது பிரிட்டனின் பாதுகாப்பு சேவைகள் இயங்குகின்றன என்பது பற்றிய மிக அரிதான பகிரங்க ஒப்புதல்களில் இதுவும் ஒன்றாகும்.

வேவு நடவடிக்கை தொடர்பாக பிரிட்டனின் முன்னணி கல்விசார் அதிகாரம் மிக்கவரான பேராசிரியர் கிறிஸ்தோபர் அன்ட்ரூ பின்வருமாறு இதனைக் கூறுகிறார்; ஒரு ஜனநாயக நாட்டுக்கு திறன் மிக்க உளவு சேவை மிக அவசியமாகத் தேவைப்படுகிறது. ஒரு வழியில் அவை ஜனநாயகத்தின் காவலர்களாகும்''. ஆனால் காவலர்களை பாதுகாப்பது யார்? அத்துடன் பாதுகாக்கப்பட வேண்டும் என கருதப்படுவோர் விவகாரங்கள் பிழையாகப் போகிறபோது எவ்வாறு அதனை அறிவது என்ற கேள்விகளுக்கு பதில் கூறவேண்டும்.

அன்று இந்த விடயம் பற்றி பி. பி. சி. வானொலி நிகழ்ச்சி ஒன்றின்போது கெடுபிடியில் யுத்தம் முடிந்திருப்பினும் வேவு நடவடிக்கை உயிர்ப்புள்ளதாகவும் சிறப்பாகவும் இருந்து வருகிறது என்று கூறினார். 1989இல் பேர்லின் சுவர் இடிக்கப்பட்டதாலும் 2 அல்லது 3 வருடங்களின் பின் சோவியத் ஒன்றியம் ஜனநாயகத்தை நோக்கி நகர்ந்திருப்பதனாலும் இதனை உய்த்துணர்வது இலகுவான விடயம் ஆகும்.

### சமாதானத்திற்கு

பதில்; தற்போது சமாதானப் பேச்சு வார்த்தைகள் ஏற்படுவதற்கான சூழ்நிலை இருப்பதாக எனக்கு தெரியவில்லை போர் நிறுத்தத்திற்கும் சமாதானத்திற்கும் நாம் தயாராக இருக்கின்றோம் என நாம் பலதடவைகள் பகிரங்கமாகவே அறிவித்திருக்கிறோம் கடந்த மூன்று வருடங்களாக இங்கு வந்த சமாதான தூதுக் குழுக்களிடம் எமது இந்த நிலைப்பாட்டை தெளிவுபடுத்தினோம். ஆனால் சிறிலங்கா அரசாங்கம் சமாதானத்திற்கான எமது கோரிக்கைகளை நிராகரித்து வருகிறது. இதுவரையும் எந்தவொரு நல்லெண்ண அறிகுறிகளையும் அரசு காட்டுவதாக தெரியவில்லை பெரியதொரு படை எடுப்பிற்கான ஆயத்தங்களை செய்வதாகவே தெரிகின்றது. ஆகவே பேச்சுவார்த்தைக்குரிய சூழ்நிலையை ஏற்படுத்துவது சிறிலங்கா அரசின் கைகளிலேயே உள்ளது.

கேள்வி: அரசத் தலைவர்க்கான தேர்தல் அரசியல், சாசன ரீதியில் செல்லுபடியாவதற்கு இந்த தேர்தல் வடக்கிலும், கிழக்கிலும் நடத்தப்பட வேண்டும் அரசுத் தலைவருக்கான தேர்தலும் பாராளுமன்றத்திற்கான தேர்தலும்கூட தமிழ்ப் பகுதிகளில் நடக்கக்கூடிய வகையில் இணக்கம்ஏதும்ஏற்படக் கூடிய வாய்ப்பு உண்டா?

பதில்: எமது மக்களுக்கான உரிமைகள் நிறைவேற்றப்பட்டு எமது மக்கள் சுதந்திரமாகவும் உரிமையோடும் வாழ்வதை உறுதி செய்யப்படும் வரை எந்த ஒரு தேர்தலும் இந்த மண்ணில் நடப்பதை எமது மக்கள் விரும்பப் போவதில்லை ஆகவே இங்கு தேர்தல் நடப்பதை நாம் அனுமதிக்கப்போவதில்லை.

கேள்வி: சென்ற நவம்பர் திங்களில் பூநகரியில் நடந்த சண்டைக்கு பின்னர் சண்டையில் ஒரு மந்த நிலை ஏற்பட்டிருக்கிறது அது எதனால்? அரசு ஒரு பெரிய தாக்குதல் நடத்தப் போகிறது என்ற செய்திகள் அடிபடுகின்றன எதிர்காலத்தில் சண்டை தீவிரப்படுமென நீங்கள் எதிர்பார்க்கிறீர்களா?

பதில்: தற்போது போரில்மந்த நிலை ஏற்பட்டுள்ளது என்றுசொல்ல முடியாது ஒரு பெரியயுத்தத்திற்கான ஆயதங்களை அரசாங்கம்செய்துவருகிறது: இராணுவத்திற்கு போர்பயிற்சிகளை கொடுப்பதுடன் வெளிநாடுகளில் இருந்து பெருந்தொகையான ஆயுதங்களை வாங்கி குவித்து வருகின்றது

இது ஒரு புறமிருக்க பூநகரி சமரை அடுத்து பல்வேறு இடங்களில் சிறிய அளவிலான மோதல்கள் நிகழ்ந்து வருகின்றன வவுனியாவில் மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கை ஒன்றும் மேற்கொள்ளப்பட்டுள்ளது எம்மை பொறுத்தவரை எமது மண்ணை காக்கும் நோக்கில் ஒரு பாதுகாப்பு யுத்தத்திற்கு நாமும் தயாராகி வருகிறோம்

கேள்வி: நான் இங்கு வந்த பின்னர் ஒரு விடயம் எனக்கு தெளிவாக தெரிகிறது சிவில் நிர்வாகத்தை நடத்துவதில் எல். ரீ. ரீ. யினர் கூடுதலாக பங்கேற்று வருகின்றனர் பல துறைகளில் அது ஓர் அரசு போல் செயல்படுகிறது இது ஏன் ஏற்பட்டது இதை விரிவு படுத்தும் நோக்கம் உங்களுக்கு உண்டா?

பதில்: யாழ்ப்பாணக் குடாநாட்டில் மட்டுமல்லாது எமது கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களில் நாம் சிவில் நிர்வாக அமைப்புக்களை உருவாக்கி வருகிறோம்.

தமிழ்ப் பகுதிகளில் அரசின் நிர்வாக இயந்திரம் பெருமளவில் செயலிழந்து போய் இருக்கிறது இந்த நிலைமையை சீர்செய்து எமது மக்களின் அன்றாட தேவைகளை பூர்த்தி செய்யும் நோக்கத்துடன் நாம் எமது நிர்வாக அமைப்புக்களை கட்டியெழுப்பி வருகிறோம் இன்றைய சூழ்நிலையில் இது ஒரு வரலாற்று தேவையாக உள்ளது.

கேள்வி: இங்கு சிவில் நிர்வாக அலுவலகங்களில், துறைகளில், அமைப்புகளில் போராளிகளை பொறுப்பாக போட்டிருக்கிறீர்கள் உதாரணமாக நீதிபதிகள் இளைஞர்களாக இருக்கிறார்கள் இந்த துறைகளை நடத்துவதற்கு படித்த அனுபவமுள்ள பொது மக்கள் இருக்கும்போது இவர்கள் ஒதுக்கப்பட்டு அரச அலுவலகங்களின் பொறுப்பை எப்போதும் போராளிகளிடம் ஒப்படைக்கிறீர்களே?

பதில்: பல நிர்வாக அமைப்புகளில் போராளிகளும் பொதுமக்களும் இணைந்தே செய்துவருகிறார்கள் அநேகமான அலுவலகங்களில் எமது போராளிகளே பொறுப்பாளர்களாக இருப்பது உண்மைதான் நிர்வாகத்தை நேரடியாக கண்காணித்து கட்டுப்பாட்டுடனும் திறமையுடனும் நிர்வாகத்தை கொண்டு நடத்தும் நோக்கில் எமது போராளிகளுக்கு இப்பொறுப்புகளை கொடுத்துள்ளோம்.

கேள்வி: இந்தியத் திரைப் படங்களை முக்கியமாக சில இந்தியதமிழ்ப் படங்களை தடைசெய்துவிட்டீர்கள். மக்களின் பொழுதுபோக்கை ஏன் கட்டுப்படுத்த விரும்புகிறீர்கள்?

பதில்: நாம் பொதுவாக தென்னிந்திய திரைப்படங்களை தடைசெய்வது பற்றி பரிசீலனை செய்துவருகிறோம் ஏனெனில் அநேகமான தமிழ் படங்கள் கலாசாரத்தை சீர்குலைப்பதாக இருக்கின்றது தமிழீழ மக்களின் பண்பாட்டிற்கு இது குந்தகமாக இருக்குமென நாம் கருதுகிறோம்.

பாலியல், வன்முறை, கொலை கொள்ளை மற்றும் மனிதர்களுக்கு இன்னல் விளைவிக்கும் பல்வேறு அம்சங்களை இந்தப் படங்கள் கருப்பொருளாக கொண்டுள்ளன இந்தப் படங்களை தடை செய்துவிட்டு நாம் எமது திரைப்படத்துறையை பெரிய அளவில் வளர்க்க தீர்மானித்துள்ளோம்

புரட்சிகரமான சிந்தனை சமூக மேம்பாட்டையும் கொண்ட சிறந்த திரைப் படங்களை தயாரித்து மக்களுக்கு வழங்குவதே எமது நோக்கம்.

கேள்வி: பூநகரி சண்டைவரை நீங்கள் களத்தில் சண்டையிட்டு வந்த ஒரு போர்வீரர். இப்பொழுது அரசியல் பிரிவின் தலைவராக இருந்து வருகிறீர்கள். இராணுவ பணிகளில் இருந்து அரசியல் பிரிவின் தலைவராக வந்திருக்கிறீர்கள் இந்த மாற்றம் பற்றி உங்கள் உணர்வுகள் என்ன?

பதில்: அநேகமாக இரண்டிலும் வேறுபாடுகள் இல்லை. தற்பொழுது ஆற்றும் கடமை அநேகமாக மக்களுக்கான தேவைகளை வழங்குவதாக உள்ளது. போராட்ட முன்னெடுப்புகளை மக்களுக்கும் வெளி உலகிற்கும் கொண்டு வரும் பணிகளை செய்வதாகும். இப்பொழுது எனது பணி சற்று வேறுபட்டிருந்தாலும் அதற்கும் இதற்கும் வேறுபாடு இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

நீதிமன்ற கணக்கிலிருந்த பணத்தை

# மோசடி செய்த பெண் சவுதியில் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

கொழும்பு நீதிமன்றத்தின் வங்கிக் கணக்கில் இருந்த பல கோடி ரூபா பணத்தைக் கையாடிய பெண் தற்போது சவுதி அரேபியாவில் இருப்பதாக சர்வதேச பொலிசார் தெரிவித்துள்ளனர்.

நீதிமன்ற வங்கிக் கணக்கில் இருந்த ஒரு கோடி தொண்ணூற்றி மூன்று லட்சம் ரூபாவை மோசடி செய்தது தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்படுகையில் காணாமல் போன இப்பெண் சவுதி அரேபியாவில் இருப்பதாக கண்டுபிடிக்கப்பட்டது.

இவர் இந் நீதிமன்றத்தில் எழுதுவினைஞராக இருந்தவர் எனதெரிவிக்கப்படுகிறது.

# பிரேமச்சந்திரா அணி பொ.ஐ.மு.வை ஆதரிக்கும்

பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு தமது ஆதரவை தொடர்ந்தும் வழங்கப்போவதாகவும், தமது கட்சி உறுப்பினர்களிடம் இது குறித்து தான் அறிவிக்கப் போவதாகவும் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணித் தலைவர் ஜீ.எம். பிரேமச்சந்திரா தெரிவித்துள்ளார்.

மேல்மாகாண சபையில் இவரது ஆதரவு அமைச்சர் ஒருவரைப் பதவி நீக்கியதை அடுத்து எழுந்த சர்ச்சை நேற்று முன்தினம் நடைபெற்ற பேச்சுவார்த்தை ஒன்றின் மூலம் நீக்கப்பட்டதை அடுத்தே இவர் இவ்வாறு அறிவித்துள்ளார்.

இச்சந்திப்பில் ஜீ.எம். பிரேமச்சந்திராவும், சு. க. சார்பில் அதன் பொதுச் செயலாளர் தர்ம சிறிசேனாநாக்க மற்றும் அதன் அமைப்பாளர் அனுரத்த ரத்வத்தையும் கலந்துகொண்டனர்.

### ஜனாதிபதித்

லங்கா ஜனாதிபதிக்கும் எந்த விதத் தொடர்பும் இல்லை என்பதை ஏற்றுக் கொள்வதாகவும் முடியும். இந் நிலையை இலங்கையின் ஒருமைப்பாட்டிற்கு விரோதமான செயல் என எதிர்க்கட்சிகள் இதனையும் மறுக்க முடியும்.

இந்நிலையில் அரசாங்கம் ஜனாதிபதித் தேர்தல் குறித்து தேர்ந்தெடுக்கும் வழிமுறையானது பெரும்பாலும் ஜனநாயக விரோதமானதும், அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு விரோதமானதாகவுமே அமையக்கூடும். இவ்வழிமுறையில், அரசாங்கம் தனது வெற்றி வாய்ப்பை உறுதிப்படுத்திக் கொள்ளவும் வழிதேடக் கூடும். ஆனால், அவ்வாறான வழிமுறையில் டி. பி. விஜேதுங்கா தோற்பாரேயானால் எதிர்க் கட்சி தனது பழைய பகையைத் தீர்க்கத் தயங்காது. தேசத் துரோகம் எனவும், அரசியலமைப்புக்கு விரோதம் எனவும் குற்றங்கள் சாட்டப்படலாம். குடியுரிமை பறிப்பு போன்ற தண்டனைகளும் கிடைக்கலாம்.

## கொடுப்பனவு

ஊர்காவற்றுறை பிரதேசச் செயலர் பிரிவால் வழங்கப்படும் வைகாசி மாதத்திற்கு உரிய பொதுசன மாதாந்த உதவிப் பணம் மற்றும் தொழுநோய், புற்றுநோய் காசநோய்ஆகிய நோயாளர்களுக்கான உதவிப் பணமும் தற்பொழுது சுழிபுரம்தபாலகத்திலுள்ளகாரைநகர் கிளைஅஞ்சகத்திலும்யாழ்ப்பாண தபாலகத்திலுள்ள ஊர்காவற்றுறைக் கிளையிலும் கைதடி அஞ்சலகத்திலும் விடத்தல் பளை - வண்ணார்பண்ணை உப அஞ்சலகங்களிலும் வழங்கப்பட்டுவருகிறது. (21)

### சிறிலங்கா

அமைச்சரவை மாற்றங்கள் நடைபெறவுள்ளன. பொது நிர்வாக அமைச்சர் பெஸ்டஸ் பெரேராவுக்கு மீண்டும் மீன்பிடி அமைச்சு வழங்கப்பட இருப்பதாகவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

மேலும் எந்தவொரு அமைச்சரும் வெளியேற்றப் படமாட்டார்கள் என்று தற்போது உறுதிசெய்யப்பட்டுள்ளது.

### தேர்தல்

தல்களை நடாத்துவது குறித்தும் அதற்கான சாத்தியக் கூறுகள் குறித்தும் ஜனாதிபதி பிரஸ்தாபித்தார்.

வடக்கில் தற்போது நிலவும் சூழ்நிலையில் தேர்தல்களை நடாத்துவது சாத்தியமில்லை என்று யாழ். அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் அழுத்தம் திருத்தமாக ஜனாதிபதியிடம் கூறிவிட்டார். வடபகுதியில் தேர்தலை நடாத்த முடியாமைக்கு அரச அதிபர் பல்வேறு காரணங்களை எடுத்து விளக்கியுள்ளார்.

### பொலிஸ்

வும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேசமயம் விடுதலைப் புலிகளால் தாக்கி அழிக்கப்பட்ட பொலிஸ் நிலையம் நேற்றுப் பகல் வேளையிலும் எரிந்து கொண்டிருந்ததாக அப்பகுதி மக்கள் தெரிவித்ததாக ஏ. எப். பி. செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன. அத்தோடு கொல்லப்பட்ட பொலிஸார் ஒருவரின் தலை வீதியில் கிடக்கக் காணப்பட்டதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

# தீ விபத்து

மட்டக்களப்பு மாவட்டத்தில் இருக்கும் இலுப்பையடிச் சேனையிலுள்ள இராணுவத்தினரின் முகாமிலுள்ள ஆறு ஓலைக்குடிசைகள் தீயில் எரிந்து சாம்பராகின. இச் சம்பவம் கடந்த சனிக்கிழமையன்று இடம்பெற்றுள்ளது.

சம்பவதினம் இராணுவத்தினர் சில ஆயுதங்கள் மற்றும் சில இராணுவ உபகரணங்களை அழித்த போது ஏற்பட்ட தீ விபத்தினாலேயே மேற்படி குடிசைகள் சாம்பராகியதாக கூறப்படுகிறது.

# பலாத்கார குடியேற்றம்

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் இராணுவ அச்சுறுத்தல் உள்ள பகுதிகளில் தமிழ் மக்களை வலுக்கட்டாயமாக மீளக் குடியமர்த்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இடம்பெயர்ந்த இந்த மக்கள் பாதுகாப்பு உத்தரவாதம் இல்லை என்று கூறி இவ்வாறான மீளக் குடியமர்த்தும் நடவடிக்கைக்கு மறுப்புத் தெரிவித்து வருகின்றனர்.

## விற்பனை

எம்மிடம் விடியோ டெக்குகளுக்கு தேவையான
வீடியோ ஹெட் ( Video head )
மலிவு விலையில் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகட்கு: **மின்வளம்**

இல. 81, லெப். கேணல் சந்தோசம் தெரு,
( கஸ்தூரியார் விதி ) யாழ்ப்பாணம்.
(சி-9641)


# சமூக அநீதியான சீதனத்தை எரித்தால் எம் இனிய தேசமும் நிம்மதியாய் சிரிக்கும்

## நெஞ்சம் நிறைந்த நன்றிகள்

06-06-94 இல் இறைபதம் எய்திய எமது குடும்பத்தின் குலவிளக்கு, அமரர் ஆ. க. நடராசா அவர்களின் ஈமச்சடங்குகள் நல்ல முறையில் நடைபெற எமக்கு பூரண ஒத்துழைப்பும், பலவித உதவிகளும் தந்துதவிய சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் (ICRC) யாழ். போதனா வைத்தியசாலை வைத்தியர்கள், கொழும்பு திருப்பதி ஏஜன்ஸி ஸ்தாபனம். வவுனியா வீ. கே. ஆர். ஸ்தாபனம், யாழ். வணிகர் கழகம், யாழ். வணிகர் ஊழியர் கழகம், யாழ். வகுப்புத் தொழிலாளர் கழகம் ஈசன்ஸ் நிர்வாகம். ஈழநாதம் நிர்வாகத்தினர், தர்ஷினி அமுதம் மற்றும் அஞ்சலிப் பிரசுரம் விநியோகித்த பொது ஸ்தாபனங்கள், தபால் மூலம் அனுதாபச் செய்தி அனுப்பியவர்கள், இரங்கல் உரை நிகழ்த்திய பெரியவர்கள், எமது வர்த்தக நிலைய ஊழியர்கள், ஈமக்கிரிகைகளில் கலந்துகொண்ட உற்றார், உறவினர்கள், நண்பர்கள் மற்றும் யாவருக்கும் எமது நெஞ்சம் நிறைந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.


- நன்றி -

மனைவி: ந. ஞானகலை
மகன்: ந. தங்கேஸ்வரன்

கொ. க. ஆ. க.
இல. 316, கிட்டு சாலை,
யாழ்ப்பாணம்.

இல. 26 வைமன் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். (8585)

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



### லெப். சந்திரபவான் 'அலோசியஸ்

(சுந்தரலிங்கம் மோகனதாஸ், நவரெத்தினத்தின் பேரன், தொண்டமானாறு வீரகத்திப் பிள்ளை மகாவித்தியாலயத்தின் பழைய மாணவன்)

பிறப்பு 8.8.1974 — வீரச்சாவு 9.7.1992

திதி: 17- 06- 1994

பள்ளிப் பருவத்திலே பாடம் சுமந்து நின்ற
மோகனதாசே
நம் நாட்டின் சுதந்திரத்திற்காக விடுதலைப்புலியென
பாய்ந்தாயே
உன் எண்ணங்கள் நிறைவேறுமடா
நீ விடுதலையின் வழிகாட்டியடா. மறுபிறப்பிலும்
வருவாயடா
நீ சென்ற பாதையை பின் தொடர்வோம்

ஆக்கம்: அன்புத் தங்கை
ஜெ. தர்மினி

உன்நினைவால் வாடும்
அம்மா, சகோதர சகோதரிகள்,
பேரன், உற்றார், உறவினர்கள்,

கொத்தியகாடு
தொண்டமானாறு.

(8584)

## ஆர்.பி.ஜி.தாக்குதலும் நடைபெற்றது

காரைநகர் கடற்படைத் தளத்தினுள் கடந்த ஞாயிற்றுக்கிழமை விடுதலைப் புலிகளால் நடாத்தப்பட்ட தாக்குதலின்போது இரண்டு கிளைமோர் கண்ணிவெடிகளும் ஆர். பி. ஜி. மற்றும் தானியங்கி ஆயுதங்களும் பாவிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இத்தாக்குதலில் பலாங்கொடவை சேர்ந்த 2ஆம் லெப்டினன்ட் ஏ. கே. குணரட்ண, கொஸ்கெடவச் சேர்ந்த போக்குவரத்து உதவியாளர் ஏ. எம். டி. சோய்சா, மாத்தளையைச் சேர்ந்த டி. எச். யு. பி. டி. சில்வா ஆகியோர் பலியாகியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## கப்பல் பயணிகளுக்கு

நரோமா கப்பலில் 18-ம், 21-ம் திகதிகளில் பயணம் செய்வதற்கென பணம் செலுத்திய பயணிகளை நாளை (சனிக்கிழமை) மதியம் 12.00 மணிக்கு முன் பருத்தித்துறை இறங்குதுறைக்கு தவறாது சமுகமளிக்கும்படி அரச அதிபர் கேட்டுள்ளார்.

## அவசர குருதித் தேவை

யாழ். போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்களம் 12இல் சிகிச்சை பெறும் சிறுமி ஒருவருக்கு மிகவும் அவசரமாக AB+ குருதி தேவைப்படுகின்றது.

கருணை உள்ளம் கொண்டோர் குருதிக் கொடையளிக்க யாழ். போதனா மருத்துவமனை நோயாளர் நலன் புரிச் சங்கத்தில் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1994 - 06 - 17**
**வெள்ளி இரவு**

08. 01 - கலை மஞ்சரி முதலில் நூல் அறிமுகம் ''அதிர்ச்சி நோய் எமக்கல்ல'' உருவகக் கதை தொகுதி அடுத்து சிறுகதை ''உருட் பெறும் உணர்வுகள்'' சிறுகதையை அடுத்த கவிதைகள்
1. ''கல்லறையே என் கதை கேளாய்''
2. ''உதயத்தை நோக்கிய அவள்''
08. 30 - செய்திகள்
08. 40 - அரசியல் அரங்கம் ''புதிய பொருண்மிய உலகின் நவீன அடிமைகள்''
08. 50 - வாத்திய கானங்கள்

**1994 - 06 - 18**
**சனி காலை**

07. 02 - மாவீர வணக்கம்
07. 15 - நீங்கள் கேட்டவை
07. 30 - செய்திகள்
07. 35 - பத்திரிகைச் செய்திகள்
07. 40 - நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

## ராணுவக் காவலரண்களில் பாலியல் வன்முறை

(யாழ்ப்பாணம்)

திருகோணமலையில் சிறிலங்காப் படையினரால் அமைக்கப்பட்டுவரும் புதிய இராணுவக் காவல் அரண்கள் பாலியல் வன்முறைக்களங்களாகவும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

கடற்கரைச் சேனை, நாவலடிச் சந்தை ஆகிய பகுதிகளில் உள்ள காட்டுப் பகுதிகளுக்கு விறகு வெட்டச் செல்லும் தமிழ்ப் பெண்கள் பலர் அங்கு புதிதாக அமைக்கப்பட்டிருக்கும் காவல் அரண்களுக்கு படையினரால் அழைத்துச் செல்லப்படுகின்றனர். இக்காவல் அரண்களில் வைத்து இப்பெண்கள் தொடர்ச்சியாக பாலியல் வன்முறைக்குட்படுத்தப்படுகின்றனர். இதனால் இப்பெண்கள் அக்காவல் அரண்களிலேயே இறந்தும் விடுகின்றனர் என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன,

## புலிகளின் பாதுகாப்பிலுள்ள யுத்தக்கைதிகள் இவ்வருட இறுதிக்குள் விடுவிக்க கோரிக்கை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளால் யுத்தக் கைதிகளாகப் பிடிக்கப்பட்டு நான்கு வருடங்களாக தடுத்து வைக்கப்பட்டிருக்கும் பொலிசார் மற்றும் இராணுவத்தினர் தாம் இவ்வருட இறுதிக்குள் விடுவிக்கப்படவேண்டும் என கோரியுள்ளனர்.

இவ்வாறு விடுவிக்கப்படத் தவறின் தாம் சாகும் வரை உண்ணாவிரதம் ஆரம்பிக்கப் போவதாகவும் அறிவித்துள்ளனர் எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## முன்னோடிப் பரீட்சை

தேசிய கல்வி நிறுவக-கல்வி டிப்ளோமா நெறியின் யாழ். இந்து மகளிர் கல்லூரி மாணவர்களுக்கான முன்னோடிப் பரீட்சை நாளை(18-ம் திகதி) காலை 9.00 மணிக்கு நடைபெறுமென நிலைய சிரேஷ்ட விரிவுரையாளர் அறிவிக்கின்றார்.


யாழ். **ஸ்ரீதரில்**

இன்று முதல்
ARONOLD SCHWARZENEGGER
நடித்த
**PREDATOR**
தினசரி மாலை 4, 6 மணி
சனி, ஞாயிறு
காலை 10-30, மாலை 4, 6 மணி

24 வெள்ளி முதல்
STEVEN SPIELBERG
இயக்குதலில்
RICHARD ATTENBOROUGH
நடித்த
**JURASSIC PARK**
(சி-9812)


## துடுப்பெடுத்தாட்ட இறுதிப் போட்டிகள்

ஒறேற்றர் சி. சுப்பிரமணியம் ஞாபகார்த்தமாக
சுன்னாகம் சரா சேது விப ஒபித்
நிறுவனங்கள் நடாத்தும் துடுப்பெடுத்தாட்ட
இறுதிப் போட்டிகள் 19-6-1994
பிற்பகல் 1.00 மணிக்கு சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் நடைபெறும்.

எல்லோரையும் அன்புடன் அழைக்கின்றோம்
சேது விபுலானந்தா
அமைப்பாளர்
(சி- 9816)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 17 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.